Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1187)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 03 செவ்வாய்க்கிழமை (17.01.2012) பக்கங்கள் 16 ஓசை – 108



தேசிய அணியில்

13

காலநடைகளின் வாழ்விடம்





04



கைதுசெய்யப் படலாம்

12





பெரிய சாதனை

07

# படையினர் வசமிருந்த குடியிருப்புகள் 21 வருடங்களின் பின் உரியவர்களிடம்



(மண்டைதீவு)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தீவிர முயற்சியை அடுத்து மண்டைதீவில் கடந்த 21 வருடங்களாக கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த மக்கள் குடியிருப்புக்கள் மீளவும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணியளவில் மண்டைதீவு புனித பேதுறுவானவர் கத்தோலிக்க தேவாலய முன்றலில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மண்டைதீவின் தெற்கு, கிழக்குப் பகுதிகளான ஜே/07, ஜே/09 3, 5 ஆம் வட்டாரங்களைச் சேர்ந்த 55 குடும்பங்களைச் சேர்ந்த 140 பேர் வீடு மற்றும் காணிகளை உடைய (15 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தார் கிருஷ்ணா



(கொழும்பு)

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று மாலை இலங்கை வந்தடைந்தார்.

கொழும்பு வந்த அவ்ரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் (15 ஆம் பக்கம் பார்க்க)

# படைத்தரப்பின் சிவில் நிர்வாகத் தலையீடு படிப்படியாக நீக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

(கொழும்பு)

சிவில் நிர்வாகத்தில் காணப்படும் படைத தரப்பின் தலையீடுகளை படிப்படியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலக அரச அதிபர பணிமனையில் நேற்றையதினம் இடம்பெற்ற யாழ்., கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே



அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்திய வீட்டுத்திட்டத்திற்கு அமைவாகக் கட்டுமானப் பணிகள் நிறைவு பெறாமல் இருப்பதற்கும் இலங்கை அரசுக்கும் எவ்விதமான தொடர்புகளும் இல்லை என்பதுடன், அதற்கு இந்திய அரசினது கட்டட ஒப்பந்தகாரர்களே (15 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அநாகரிகமாக நடந்த சிறிதரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

யாழ். - கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற வேளை ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு உண்மைக்கு புறம்பாக அறிக்கைகள் வழங்குவது தொடர்பில் கருத்து தெரிவித்தவேளை இடையில் குறுக்கிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சபைக்கு ஒவ்வாத தரக்குறைவான வார்த்தை பிரயோகம் மூலம் தனது கருத்தினை தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், ஒரு கௌரவ உறுப்பினர் சபை ஒன்றில் நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும் என (15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் தேசிய நலன்சார்ந்தே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இறுதியான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக பாடுபடுவது என்பது இலங்கை மீதான தேசிய நலன்கள் சார்ந்தது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு இறுதி அரசியல் தீர்வு ஒன்று பெறப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொள்ள முன்னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தேசிய இணக்கப்பாட்டுடன் (15 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்வை விரைந்து காண அரசை வலியுறுத்த வேண்டும்

## கிருஷ்ணாவிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவது இந்தியாவின் கடமையாகும் என இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் நேற்று இரவு சுமார் 45 நிமிடங்கள் இடம்பெற்றதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற (15 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அலரி மாளிகையில் நேற்றைய தினம் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டார்.

# ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவால் யாழில் இன்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

காணமற்போன ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவின் உறுப்பினர்களுக்காக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஜே.வி.பி. கிளர்ச்சிக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

ஜே.வி.பி. கிளர்ச்சிக்குழுவினரின் உறுப்பினர்களான லலித் குமார், குகன் முருகானந்தன் ஆகிய இருவரும் கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் வைத்து இனந்தெரியாதவர்களால் (15 ஆம் பக்கம் பார்க்க)

# கல்வித்துறையில் சிகரம் தொடவேண்டும் மாணவர்களை மனதார வாழ்த்துகிறேன்

(காரைநகர்)

மாணவச் செல்வங்கள் இந்த நாட்டின் பெறுமதிமிக்க செல்வங்கள் காரிருள் நீங்கிப் பேரொளியுடன் பிறந்திருக்கும் தைத்திருநாளில் பாடசாலையில் கால்பதிக்கும் இந்த மாணவச் செல்வங்கள் கல்வித்துறையில் சிகரத்தைத் தொடவேண்டும். இவர்களுக்கு எமது வாழ்த்துக்களும், நல்லாசிகளும் உரித்தாகட்டும் என்று காரைநகர் பிரதேச சபையின் எதிரக்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி. யின் அமைப்பாளருமான ரஜனி (கண்ணன்) தெரிவித்தார்.

காரைநகர் யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர் தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் தரம் 1 இற்குச் செல்லும் மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நேற்று திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே இவ்வாறு தெரிவித்தார். முதலாம் தரத்தில் காலடி எடுத்துவைக்கும் மாணவர்களை வரவேற்கும் இவ்விழா சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன் என்றும் நல்ல மனிதர்களாக, நாட்டின் நற்பிரஜையாக ஒவ்வொருவரையும் உருவாக்குவது ஆசிரியர்களையே பெருமபாலும் சாரும். உயர் பாடசாலைகளைவிட ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் முழு அர்ப்பணிப்புடன் செயலாற்றிவருவதை நாம் கண்கூடாகப் பார்த்துவருகின்றோம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று முன்னோர் சொன்னதற்கு அமைய மூன்றாம் இடத்தில் குருவை வைத்துள்ளனர்.

ஒவ்வொரு மாணவர்களது நலனிலும் அசாங்கம் முழுக்கவனத்தையும் செலுத்திவருகின்றது. ஆகவே எம்மால் ஆன உதவிகளைப் பாடசாலைக்கு வழங்குவோம் எனக் கூறினார்.

இந்நிகழ்விற்கு விளானை கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வே.நடராசா, உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். லோகநாதன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தார்.

## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1186)

## Calling for Tender - Teaching Hospital, Jaffna.

### EXTENSION NEW BLOOD BANK SITE SHED

**01.** The chairman of the Devisional Tender Board, Teaching Hospital, Jaffna Will receive sealed tender for Extension New Blood Bank Site Shed, T.H., Jaffna up to 10.00 am on 08.02.2012 Tender form may be collected from Director, TH, Jaffna up to 03.02.2012 on payment on non refundable deposit of Rs.1000/=

**02.** Tender Will be opened immediately after closing, at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenders or their quthorized representative are requested to be present at the opening of Tenders.

**03.** Tender forms are issued only to contractors, who have a valid registration in Grade C9 (old scheme Grade M8) and above in the field of Building Constructions and other institute of Constructions Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Srilanka (NCCASL)

**04.** Sealed Tender may be dispatched either by registered post or be directly handed over to Dirctor, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00 am on 08.02.2012.

**05.** Tender Document may be inspected free of charge at the Residence Engineers office, CECB, Jaffna.

**06.** For further details please contact Hospital Secretary, T.H., Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

(C/1243)

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி அதிபர் எப்.எஸ். அன்ரன் தலைமையில் பாடசாலை ஆரம்பப பிரிவு மண்டபத்தில் கால்கோள் விழா 2012 நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகப் யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி இராமநாதன குகநாதன் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில், நாவாந்துறைப் பங்குத் தந்தை அருட்பணி பா.பி.இராஜசிங்கம் ஆசி வழங்குவார்.

(காரைநகர்)

யாழ். காரை சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய கால்கோள் விழா நேற்றுக் காலை 8.00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் சு.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக காரைநகர் ஈ.பி.டி.பி. அமைப்பாளர் வீ.கண்ணன் (ரஜனி) மற்றும் காரைநகர் தெற்கு கமக்காரர் அமைப்பின் தலைவர் சித்தாந்த வித்தகர் வே.நடராசாவும் கலந்துகொண்டனர்.(எப்.எஸ்)

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் தரம் - 1 மாணவர்களை இணைக்கும் கால்கோள விழா நேற்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்த வருடம் இப்பாடசாலையில் 140 மாணவர்கள் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படடுள்ளனர். இந்நிகழ்வில் கிளிநொச்சி வலய ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.சின்னராசா, கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் ரவீந்திரன் உள்ளிட்ட விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். (77)

# முல்லை செயலகத்தில் தைத்திருநாள் பெருவிழா

(முல்லைத்தீவு)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் தைப் பொங்கல் விழாவும், கலைஞர் கௌரவிப்பும் நேற்றுக் காலை நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் மூன்று கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். 2011 ஆம் ஆண்டு இந்து கலாசார அலுவலகத்தினால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கபட்ட கலைஞர்களான செல்வபுரத்தைச் சேர்ந்த பொன்னையா சேதுபதி, முள்ளியானைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் தவமணி ஆகியோர் இலக்கியத்துறைக்காகக் கௌரவிக்கப்பட்டனர்.

முள்ளியவளையைச் சேர்ந்த சுப்பர் கணபதிப்பிள்ளை கடந்த வருடம் 12 மணித்தியாலயம் தொடர்ச்சியாக தவில் வாசித்துச் சாதனை படைத்தமைக்காகவும் இவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் குமிழமுனைக் கலைஞர்களின் குடம் ஊதுதல் பாரம்பரிய கலை நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர். (04)

## கால்கோள் விழா

கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலையில் கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும் நேற்றுப் பாடசாலை அதிபர் திருமதி க.தவமலர் தலைமையில் இடம்பெற்றது. புதிய மாணவர்கள் தரம் - 2 மாணவர்களால் மாலை சூட்ட அழைத்துவரப்பட்டனர். அவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## மின்தடை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே தம்மால் அறிவிக்கப்பட்டிருந்ததன்படி 18.01.2012 புதன்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாறபண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம ஆகிய இடங்களில் இடம்பெறுவதாக இருந்த மின்தடை அன்றைய தினம் அமுல்படுத்தப்படமாட்டாது என்று மின்சார சபை அறிவித்துள்ளது.





தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
நான்காவது அகவையில்

பெயர் : மனோராஜ் லோஜிதன்
முகவரி: பாரதி வீதி, அச்சுவேலி.




பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்






யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

ஜனவரி 20ம் 21ம் 22ம் திகதிகளில்
துரையப்பா விளையாட்டரங்கில்
மு.ப 10.00 தொடக்கம் மாலை 07.00 வரை



கல்வி
யாழ்ப்பாணம்

(C/1240)

Jaffna International Trade Fair
20th - 22nd of January 2012 at the Duraiyappa Stadium

ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
Co- Organized by FCCISL | Supported by SRI LANKA CONVENTION BUREAU
In Association with CCIY | Partner Country INDIA
Gold Sponsor dimo TECHNOLOGY
Official Insurance Partner Sri Lanka Insurance | LITRO GAS
Official Banker Indian Bank
Co-Sponsors Elephant House | KEELLS
Official Logistic Provider dart | Official Print Media Sunday Observer Daily News | Official Print Media Tamil | Official Electronic Media

**வெறும் கடமையுணர்வின் மூலமோ குறிக்கோளின் மூலமோ பெறுமதியான எதுவும் நிகழ்ந்துவிடுவதில்லை. மாறாக மனிதர்களிலும் கொண்ட இலட்சியத்திலும் உள்ள விசுவாசத்தினாலும் அர்ப்பணிப்பினாலுமேயாகும்.**

**- அல்பேட் ஐன்ஸ்டீன்**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வீதிகளின் நோக்கத்தைச் சிதைக்க வேண்டாம்!

நேற்றைய தினம் மூன்று வீதி விபத்துக்கள் பற்றி செய்திகள் வந்திருந்தன. மூன்றிலும் ஒவ்வொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மூன்றுமே அதிவேக ஓட்டத்தால் நேர்ந்தவை.

வடமராட்சி–நெல்லியடி பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நெல்லியடி சந்தைக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை அது கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த வீட்டின் மதிற்சுவர் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பொலன்னறுவையிலிருந்து காத்தான்குடி நோக்கி பயணித்த லொறியொன்று மின்மாற்றியுடன் மோதி விபத்துக்குள்ளானதில், ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

கம்பஹா, மாகேவிட பகுதியில் மோட்டார் சைக்கிளொன்றும், சைக்கிளொன்றும் மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இறந்த மூவரும், வயது முப்பதுகளில் உள்ள இளைஞர்கள்.

நாட்டில் வீதி விபத்துகளும், அவற்றில் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் பெற்றோல்–டீசல் விலையைப் போலவும், வாகனங்களின் எண்ணிக்கையைப் போலவும் அதிகரித்துக்கொண்டே செல்வதைப் பார்க்க முடிகிறது. காப்பெற் இடப்பட்டு பயணத்திற்கு இலகுவாக்கப்பட்டுள்ள புதிய வீதிகளை நம்மவர்கள் தவறாகப் பயன்படுத்திப் பலியாகிக் கொண்டிருப்பதும் துரதிர்ஷ்டமானது.

உலகெங்கும் உள்ள பெரு நகரங்களில் அதிகரித்து வரும் மக்கள் தொகை, விரிவடைந்து வரும் நகர எல்லைகள் போக்குவரத்தை சிக்கலாக்கி வருகின்றன. இலங்கையிலும் வீதிகள் நவீனமயப்பட்டு வரும் அதேவேளை அவை தவறாகப் பாவிக்கப்பட்டு மாறுபாடான விளைவுகள் உண்டாக்கப்படுகின்றன. கொழும்பு – காலி அதிவேகப் பாதையில் நேரும் விபத்துக்களும் நமது பயன்படுத்துகையில் உள்ள குறைபாட்டை வெளிப்படுத்துகின்றன.

மக்கள் பெருக்கம், வாகனங்களின் பெருக்கம், அதன் விளைவாக போக்குவரத்து நெரிசல் மேலும் மேலும் அதிகரித்து வருவதால், நவீன வசதிகளுடன் நிலைமையைச் சமாளிக்க, அதிவேக வீதிகள் நிர்மாணிக்கப்படுகின்றன. "குறைந்த நேரத்தில், அதிகமான மக்களை இடம்நகர்த்தும் போக்குவரத்து வசதி" என்பதே இந்த வீதித் திட்டங்களின் நோக்கம்.

வீதி விபத்துகளை முழுவதும் தடுப்பதென்பது இயலாத காரியமே. ஆனால், குறைந்தபட்சமாகக் குறைக்கலாம். அதைப் பொது மக்கள் குறிப்பாக, வாகன ஓட்டிகள் ஒவ்வொருவரும் நினைத்துச் செயற்பட வேண்டும்.

விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்பு குறித்த செய்திகளைப் பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் படிக்கும்போதும், பார்க்கும்போதும் மட்டும் அனுதாபப்படுவதும், அடுத்த வினாடி மறந்துவிடுவதும் வாடிக்கையாகிவிட்டது. மற்றவர்களுக்கு அது ஒரு செய்தி, அவ்வளவே. ஆனால், உறவுகளையோ, உடல் உறுப்புகளையோ இழந்து தவிக்கும் சம்பந்தப்பட்டோருக்குத்தான் தெரியும் வலியும், இழப்பும், தொடரும் வேதனையும்.

அரசை மட்டுமே குறைகூறிப் பயனில்லை. வீதி விபத்துகளுக்கும், அவற்றில் அதிக உயிரிழப்பு ஏற்படவும் முக்கிய காரணம் விதிகளை முறையாகக் கடைப்பிடிக்காததே. மதுபோதை, தலைக் கவசம் அணியாமை, வீதிகளில் திரியும் கால்நடைகள், கழிவுநீர்க் கால்வாய் போன்றவற்றுக்காக தோண்டப்பட்ட அல்லது மழையால் குழியாகி நிரப்பாத பள்ளங்கள் என காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவை மட்டுமன்றி, செல்போன் பேசிக் கொண்டு வாகனங்களை ஓட்டுதல், சாகசத்துக்காகப் பறத்தலும் அதிக விபத்துகள் நேரிடுவதற்குக் காரணமாகின்றன.

"அதிக வேகம் ஆபத்து" என அறிவிப்புப் பலகைகள் அறிவுறுத்தினாலும், "அதிக வேகம் ஆணுக்கு அழகு" என்றே இளைய சமுதாயம் நினைத்துக் கொள்வதாகத் தெரிகிறது. அவர்கள் தங்கள் வாகன ஓட்டும் திறமையையும், சாகசத்தையும், இளமைக் குறும்புகளையும் காட்ட வீதிகளே சிறந்த இடம் எனத் தேர்வு செய்வதும் கொடுமை.

விபத்துகளை ஏற்படுத்தி உயிர்ப் பலிக்குக் காரணமாவோருக்கு அதிகபட்ச தண்டனை, அதிக அபராதம் விதித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் வாகன சாரதிகளுக்கும் அச்சம்–கட்டுப்பாடு ஏற்படும். விபத்துகளின் எண்ணிக்கையும் குறையும். வேறு வழியில்லை.

**- ஆசிரியர் -**

# யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரிய சங்கத் தலைவர் பேராசிரியர் ஆர்.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் அழைப்பின் பேரில் நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் இப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இன்று காலை 9.00 மணிமுதல் தமது அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகக குறிப்பிட்ட அவர், தனியார் பலகலைக்கழக சட்டமூலத்திற்குரிய திட்டத்தினை பல்கலைக்கழக ஆசிரியர்களுடன் கலந்தாலோசிக்காமல் தயாரித்தமை கடந்த வருடம் தமது தொழில் சார் நடவடிக்கை முடிவிற்கு வரும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்வரும் விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை.

அவையாவன, பல்கலைக்கழக ஆசிரியர் சம்பளம் மூன்று கட்டங்களில் உயர்த்தித் தருவதாகக் கூறப்பட்டது. அதற்கிணங்க 2012 வரவு - செலவுத் திட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட 20 வீத சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

பரீட்சைக்கான கொடுப்பனவு உயர்த்தித் தருவதாகக் கூறப்பட்டது. அதற்குரிய சுற்று நிருபம் வெளியிடப்படவில்லை ஆகிய இரண்டு அம்சங்களை வலியுறுத்தியே அனைத்துப் பல்கலைககழக சம்மேளன உறுப்பினரான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களினால் இப் போராட்டம் நடாத்தப்படவுள்ளதாகவும் பேராசிரியர் விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். (பா)

# சந்திவெளி வாகன விபத்தில் ஒருவர் பலி; 10 கிராமங்களுக்கு மின்சாரம் துண்டிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில், சாரதி பலியானதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்ததாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இங்கிறாங்கொட பகுதியில் இருந்து காத்தான்குடி சந்தைக்கு கோழி ஏற்றிச் சென்று கொண்டிருந்த சிறிய வகை டாட்டா லொறியே வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பாதையை விட்டு விலகி அருகிலிருந்த மின்மாற்றியுடன் மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

வாகன சாரதியான மீராவோடை ஓட்டமாவடியைச் சேர்ந்த முகம்மது இஸ்மயில் அப்ராஸ் (வயது - 18) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த பாறுக்முகமட் ரசூல் (வயது - 32) என்பவர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளாதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மின்கம்பத்தில் மோதியதால் கிரான் தொடக்கம் வந்தாறுமூலை வரையான 10 கிராமங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது ஏனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் திடீர் மரண விசாரனை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் மரண விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

மேலும், விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதா ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டில் பயங்கரவாதப் பிரச்சினை முடிவுற்றதாக எண்ண வேண்டாம்

## பாதுகாப்புச் செயலர்



(கொழும்பு)

பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதனால், பயங்கரவாத பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டது என நினைக்க வேண்டாம் என பாதுகாபபுச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எகலியகொட பிரதேசத்தில் பாடசாலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

உயிர்த் தியாகங்களை செய்து பெறப்பட்ட அமைதியை அழிக்க சில சக்திகள் முயற்சித்து வருகிறது

நாட்டில் மக்கள் வாழக் கூடிய அமைதியான சூழலை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு இருக்கும், பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றும். நாட்டில் இருந்த கொடூரமான பயங்கரவாதத்தை அரசாங்கம் இல்லாதொழித்ததை மக்கள் மறக்க மாட்டார்கள்.

தற்போது நாட்டில் அமைதி நிலவுகிறது. அதிகளவான முதலீட்டாளர்கள் வருகின்றனர். நாட்டின் துரிதமான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் அச்சம், சந்தேகமின்றி வாழ்கின்றனர். இதற்கு காரணம் நாட்டில் நிலவும் அமைதியே. பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சுதந்திரத்தை இல்லாமல் செய்துகொள்ளக் கூடாது.

நாடு பெற்ற சுதந்திரத்தை அழிக்க சில சக்திகள் மீண்டும் தலைதூக்கி வருகின்றன. பாதுகாப்புத் தரப்பினர் இது குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். இப்படியான சந்தர்ப்பங்கள் மக்கள் அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமாக இருக்க வேண்டும்.

வேறு நாடுகளிலிருந்து அச்சுறுத்தல்கள் வருகின்றன. பயங்கரவாதத்தை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிகள் நடைபெற்று வருகின்றன எனவும் கோத்தாபய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

# வடக்கில் 410 தனியார் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியில் இணைவு

## வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் 410 தனியார் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 242 நிறுவனங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 81 நிறுவனங்களும், வவுனியா மாவட்டத்தில் 76 நிறுவனங்களும், மன்னார் மாவட்டத்தில் 11 நிறுவனங்களும் ஊழியர் சேமலாப நிதியில் இணைந்துள்ளன.

அதேவேளை, இந்த நான்கு மாவட்டங்களிலும் 1271 ஊழியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். யாழ். மாவட்டத்தில் 483 ஆண்களும், 243 பெண்களும் - கிளிநொச்சியில் 144 ஆண்களும், 38 பெண்களும், வவுனியாவில் 258 ஆண்களும், 178 பெண்களும், மன்னாரில் 16 ஆண்களும், 11 பெணகளும் ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது தொழில் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதால் இந்த வருடம் இம் மாவட்டத்தில் ஊழியர் சேமலாப நிதி அங்கத்துவ படிவங்கள் நிரப்பப்பட்டு புதிய ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள் என வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# இருளில் மூழ்கிக் கிடக்கும் தெல்லிப்பளை பேருந்து நிலையம்

(தெல்லிப்பளை)

வலி.வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட தெல்லிப்பளை பேருந்து நிலையத்திற்கு மின்சார வசதிகள் இல்லாமையால் இரவு வேளைகளில் பிரயாணத்தை மேற்கொள்ளும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு முன்னால் உள்ள இப்பஸ் தரிப்பு நிலையத்திலிருந்தே அரச மற்றும் தனியார் பேருந்துகள் நாளாந்தம் தமது பயணத்தை மேற்கொள்கின்றன.

இந்த நிலையில் இப்பஸ் நிலையத்திற்கு மின்சார விநியோகம் இடம்பெறாததால் இவ்விடம் இரவில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இப பஸ்தரிப்பு நிலையத்தை அண்டிய ஏனைய பகுதிகளிற்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ள நிலையில் இப்பேருந்து நிலையத்திற்கும் இம்மின்சார வசதிகள் வழங்கப்பட்டால் பயணிகள் இலகுவாகத் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து தெலலிப்பளைக்கு இரவு 8 மணிக்கு இறுதிப் பேருந்துச் சேவை இடம்பெறுகின்றது.

இந்த நிலையில் இப்பேருந்துச சேவை மூலம் தமது பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் பேருந்து நிலையத்தில் இறங்கி திக்குத் திசை தெரியாது இருளில் தவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இப்பேருந்து நிலையத்திற்கு மின்சார விநியோகத்தைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு இப்பகுதி மக்களும், பயணிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (93)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம் 01 வகுப்பிற்கான புதிய மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் இ.கோகுலராகவன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் கலந்து கொள்வார்.

புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி இசுறு பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்ட போது அதன் ஆரம்பப் பாடசாலையே புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வீதிப் பகுதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தல்


(வவுனியா)

வவுனியா தெற்குப் பிரதேச சபையினால் சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டு வருவதாக அப்பிரதேசசபையின் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்தார்.

சாஸ்திரிகூழாங்குளம் கிடாச்சூரி வீதியில் நீண்டகாலமாக மின் விளக்குகளின்றி காணப்பட்ட நிலையில் இது தொடர்பில் மக்களால் தெரியப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் மின்விளக்குகள் பொருத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

## கால்நடைகளின் வாழ்விடமாகும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வவுனியா)



வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சில்லறை விற்பனை நிலையமானது மக்கள் பாவனைக்குத் திறக்கப்படாத நிலையில் கால்நடைகளின் வாழ்விடாக மாறிக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

79 இலட்சத்து 40 ஆயிரத்து 871 ரூபா செலவில் கட்டப்பட்ட இக்கட்டடமானது மக்கள் பாவனைக்கின்றிக் காணப்படுவதானது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இக்கட்டடத்தின் முன்பகுதியில் இரவு வேளையில் கால்நடைகள் தங்குவதாகவும், அதன் வாயிற்பகுதி கால்நடைகளின் எச்சங்கள் நிரம்பிக் காணப்படுவதனையும் அவதானிக்க முடிகிறது.

எனவே இக்கட்டடத்தினைத் திறந்து அப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் ஆவன செய்யப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

## எரிபொருள் நிரப்புவதற்கு வசதி

(வடமராட்சி)

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மேலதிகமாகப் பெற்றோல் பம் மற்றும் டீசல பம் ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது.

இவ் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு நாளாந்தம் அதிக எண்ணிக்கையிலான மக்கள் எரிபொருள் நிரப்புவதற்காக வருகை தருகின்றனர்.

இந்நிலையில் புதுவருட தினத்தை முன்னிட்டு பாவனையாளர்களின் நன்மை கருதி பெற்றோலை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் நெல்லியடி-கட்டைவேலி ப.நோ.கூட்டுறவு சங்கத்தினால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்செயற்பாட்டால் தற்போது எரிபொருளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (18)





**சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தின் நிறுவுநர் உதயநாளும், பரிசளிப்பு வைபவமும் அண்மையில் நடைபெற்றது.**

**சின்மயா மிஷனின் யாக்ரத சைதன்ய சுவாமிகள் வைத்திய கலாநிதி மகேசன் தம்பதிகளை பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், நிறுவன ஸ்தாபகர் திருமதி சிறிமா ஜெயசேகரா வாழ்வக மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இரண்டாயிரம் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான காசோலையை வாழ்வகத் தலைவரிடம் வழங்குவதையும் காணலாம்**

## கட்டடப் பணி பூர்த்தி

(காரைநகர்)

காரைநகர் வலந்தலைச் சந்தியில் அமைக்கப்பட்டுவரும் பஸ் நிலைய வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளது.

லண்டன் காரை நலன்புரிச் சங்கத்தினரின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுள்ள இப் பஸ் நிலையம் பயணிகளின் நன்மைக்காகவே அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தைபசு காய்ச்சல் பரவும் முறை தொடர்பாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தைபசுக் காய்ச்சல் நோய் வேகமாக பரவி வருகின்றது. இத்தொற்று நோயினால் கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் 183 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்தியத் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

**தைபசுக் காய்ச்சல் - அறிமுகம்**

ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த பக்றீரியாக்களால் ஏற்படுத்தப்படும் தொற்று நோயாகும். இது யாழ்ப்பாணத்தில் தற்போது வேகமாகப் பரவி வருகின்றது. யாழ்.மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டு 183 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**நோய் தொற்றும் முறைகள்**

Rickettsia குடும்பத்தைச் சேர்ந்த Backeriafs பெரும்பாலும் கடத்தப்படுவது புறவொட்டுண்ணிகளால் ஆகும். இவை பெரும்பாலும் தெள்ளு, பேன், உண்ணிகள், பாலுண்ணிகள் இரத்தத்தை உறிஞ்சும் போது தொற்றலடைகின்றன. அது மட்டுமன்றி இவ் உண்ணிகள் தோலின் மேற்பரப்பில் காணப்படும்போது அவற்றின் மலம் தோலில் விடப்படுவதனால் அவை தோலில் காணப்படும் புண்களினூடாகச் சென்றும் நோயை ஏற்படுத்துகின்றது.

பெரும்பாலான Rickettsia பக்ரீயாக்கள் Ehrlichia Sp, Anaplasma Sp ஒட்டுண்ணிகளால் காவப்படுகின்றன. அத்துடன் பெரும்பாலும் Spotted Fever Group Ricktsiae கள் பால் உண்ணிகளால் கடத்தப்படுகின்றன. Spotted fever group Ricktsia R.akari Bacteria ஆகியன புறஉண்ணிகள் மூலம் கடத்தப்படுகின்றது. இவை rickettsiosis என்னும் நோயைப் பரப்புகின்றது.

Chiggers எனப்படும் விருத்தியடையாத பருவமான Leptotrombidium என்னும் உண்ணியானது Orientia Tsutsuga mushi என்னும் Bacteria கடத்துகின்றது. இது Scrub typhus நோயை ஏற்படுத்துகின்றது.

பறக்கும் அணில்களில் காணப்படும் புற ஒட்டுண்ணிகளான மனித உடற்பேன்கள் R.Prowszekil என்னும் Bacteria வை பரப்புகின்றது. இதன் மூலம் epidemic அல்லது Louse borne typhus ஏற்படுகின்றது.

**மனிதக் காரணிகள்**

சமூக மட்டத்திலும் சனத்தொகை அதிகமான பிரதேசங்களிலும் உடற்பேன்கள் அதிகமாக பரந்து காணப்படும். இவ்வாறான இடங்களில் Epidemic typhus அதிகமாக பரவும் வாய்ப்புண்டு.

போர், வறுமை, இயற்கை அனர்த்தம் நடைபெறும் இடங்களில் நோய்பரவும் வேகம் அதிகமாகும். விசேடமாக குளிரான மாதங்களில் உடைகளை சரியான முறையில் சலவை செய்து பாவிக்காத பிரதேசங்களிலும் அதிகமாகத் தொற்ற வாய்ப்புண்டு.

**நோய் அறிகுறிகள்**

பெரும்பாலும் நோய்றிகுறிகள் தொற்று ஏற்பட்டது முதல் 1-2 கிழமைகளில் வெளிப்படும். காய்ச்சல், தலையிடி, உடல் அலுப்பு, சிலவேளைகளில் குமட்டல், வாந்தி பெரும்பாலான உண்ணிகளால் கடத்தப்படும் Bacterial நோயானது கறுப்பு நிற அடையாளங்களை தோற்றுவிக்கும். பெரும்பாலான நோய் அறிகுறியானது குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நோய்றிகுறிகளை கொண்டிருக்கும் இதற்கு மேலதிகமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**சிகிச்சையளித்தல்**

நோயைக் கண்டறிவது கடினம். உடனடியாக பொருத்தமான சிகிச்சையை வழங்குவதன் மூலம் குணப்படுத்தலாம். ஆய்வுகூடப் பரிசோதனை முடிவுகள் வரமுன்னரே சிகிச்சையானது குணங்குறிகளை வைத்து ஆரம்பிக்கப்படும்.

Tetracyline வகுப்பைச் சார்ந்த doxcycline பக்றீரியா எதிர்ப்பு மருந்துகளை வைத்திய ஆலோசனைப்படி பெற்றுக்கொள்வதன் மூலம் குணப்படுத்தலாம்.

இந்நோய் தாக்கத்தில் யாழ்.மாவட்டத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு 140 பேரும், 2007 ஆம் ஆண்டு 121 பேரும், 2008 ஆம் ஆண்டு 115 பேரும், 2009 ஆம் ஆண்டு 87 பேரும், 2010 ஆம் ஆண்டு 120 பேரும், 2011 ஆம் ஆண்டு 183 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2011 இல் அதிக நோய் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளாக சண்டிலிப்பாய் பிரிதேச செயலர் பிரிவில் 36 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 33 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 24 பேரும், யாழ். பிரதேச செயலர் பிரிவில் 21 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**தடுப்பு முறைகள்**

நன்கு சவர்க்காரமிட்டு தினமும் குளித்தல், நன்கு சவர்க்காரமிட்டு ஆடைகளை துவைத்தல், கால் நடைகளுடன் பழகுபவர்கள், பற்றை உள்ள இடங்களுக்குச் சென்றவர்கள் உடன் நன்கு சவர்க்காரமிட்டு குளித்தல், தேவையற்ற பற்றை உள்ள இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்தல். இவ்வாறு நோய்த் தொற்று தொடர்பாக பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டிய விடங்களே இச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பத்திரிசியார் கல்லூரிக்கு பலநோக்கு மண்டபம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் பலநோக்கு மண்டபம் புனரமைக்கப்பட்டுள்ளது. மிக நீண்ட காலமாக பன்முகப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு பொதுவான மண்டபம் ஒன்று தேவையாக இருந்தது. தற்போது அந்தத்தேவை நிறைவு செய்யப்பட்டிருககிறது. லண்டனில் வசிக்கும் வைத்தியர்கள் அருள்ராஜ் ஜோசப் தம்பதிகளின் நிதியுதவியால் கல்லூரி மணிக்கூட்டுக்கு அருகில் மரவேலைக்கூடமாக முன்பு பயன்படுத்தப்பட்ட கட்டடம் புனரமைக்கப்பட்டு வைத்தியகாலநிதி அருள்ராஜ் ஜோசப் தம்பதியினரால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (20)




இனுவை செகராஜ சேகர ஐங்கரன் மீது பாடப்பட்ட கருணை வள்ளல் இனுவை செகராச சேகர ஐங்கரனே எனும் இறுவட்டு நேற்று முன்தினம் மாலை வெளியிட்டு வைக்கப்பட்டது. இறுவட்டை ஆலய தர்மகர்த்தா சின்னத்துரை சுந்தரலிங்கம் வெளியிடுவதனையும், வர்த்தகர் கந்தசாமி பெற்றுக்கொள்வதையும், நிகழ்வில் இடம்பெற்ற சிறுவர்களின் கலைநிகழ்வினையும் காணலாம்.

# எழுதுமட்டுவாழ் சந்தைக்கட்டடத் தொகுதி 50 இலட்சம் ரூபா நிதியில் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் என்றிப் திட்டத்தின் ஊடாக 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள சந்தைக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.


சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் தர்சினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அடிகடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில்,

மக்கள் எதிர்கொள்கின்ற அடிப்படைப்பிரச்சினைகள் அனைத்தும் எம்மால் நிச்சயம் தீர்த்து வைக்கப்படும் என்ற உறுதிமொழியை என்னால் வழங்க முடியும். அதற்கு மக்களும் தங்களுடைய முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். பிரதேசங்கள் ரீதியாக எமது மக்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து

அதற்கமைவாக செயற்பாடுகளையும், நடவடிக்கைகளையும் கடந்த காலங்களில் மேற்கொண்டது போல எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்படும்.

வீதிகள் புனரமைப்பு, மின்சார உட்கட்டுமானம் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பில கவலை



கொள்ளத்தேவையில்லை. இவை எமது பிரதேசத்தில் நடைபெற்று வருகின்ற அபிவிருத்திப் பணிகள். இதன் பயனை மக்கள் இன்னும் ஒரு சில ஆண்டுக்குள் அனுபவிக்க முடியுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ஆ. அலெக்சாண்டர், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள், சாவகச்சேரி பிரதேச செயலக மேலதிக பிரதேச செயலர் ரஞ்சனா, கிராம சேவையாளர் வேல்முருகு, ஈ.பி.டி.பி. கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (29)

# வவுனியா பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை


(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் வவுனியா மாவட்ட சுகாதார பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

டெங்கு நோயின் தாக்கத்தினை கடந்த ஆண்டு சுகாதார பகுதியினர் வவுனியா மாவட்டத்தில் கட்டுப்படுத்தியிருந்த நிலையிலும் வரும் முன் காப்போம் என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக டெங்கைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நகரப்பகுதியெங்கும் நுளம்பினை கட்டுப்படுத்தும் எண்ணெய் வகை விசிறப்பட்டு வருவதுடன் டெங்கு நுளம்பு பரவும் இடங்களையும் சுகாதார பிரிவினர் தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றனர்.

இதேவேளை நேற்றிலிருந்து சிறப்புத்திட்டமாக வவுனியா மாவட்ட பாடசாலைகளில் விசேட டெங்கு நுளம்பு கட்டுப்படுத்தும் செயற்பாட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.



# புனரமைப்பு

(காரைநகர்)

காலைநகர் கிழவன்காடு கலாமன்றம் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

காரைநகர் பிரதேச மாணவர்களின் கலைகளையும் திறன்களையும் வளர்த்து வரும் இம்மன்றம் சமய அறிவுடன் கூடிய நற்பிரஜைகளைஉருவாக்கி வரும் ஒரு மன்றமாகும்.

இம்மன்றம் தற்போது புனரமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டு புதுபொலிவுடன் காணப்படுகிறது.

## முரசின் இன்றைய பலன்

(17.01.2012 –செவ்வாய்க்கிழமை)

கர வருஷம் தை மாதம் 3 ஆம் திகதி. நவமி முன் இரவு 1.39 வரை. நட்சத்திரம் சுவாதி சித்தம் முன் இரவு 10.09 வரை.

இராகுகாலம் 3.35-5.05 வரை. சுப நேரம் 11.05-12.35 வரை.

எமகண்டம் 9.35 -11.05 வரை. குளிகைகாலம் 12.35 -2.05 வரை கரிநாள்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | நண்பர் உதவி, கூட்டு முயற்சி, வெளியூர் பயணம், அனாவசியசெலவு. |
| ரிஷபம:- | ஆயாச மிகுதி, பணப் புழக்கம், காரிய சாதனை, கெடுபிடிகள் அதிகரிக்கும். |
| மிதுனம் :- | பெரியோர் நட்பு, நண்பர் உதவி, மனதில் சோர்வு, தொழிற் தேர்ச்சி. |
| கடகம் :- | பிரயாண வெற்றி, நிதானம் நன்று, வேலை வாய்ப்பு சண்டை சச்சரவு. |
| சிம்மம் :- | பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, பொருள்சேரும், உறவினர் உதவி |
| கன்னி :- | மகிழ்ச்சி, பிரயாணத்தில் விரயம், நாணயம் தவறும், அதிர்ஷ்டம். |
| துலாம் :- | உற்சாகம், செலவுகள் அதிகரிக்கும், முன் எச்சரிக்கை, அரச உதவி. |
| விருச்சிகம்- | வாகனசுகம், காரியானுகூலம், பிரயாணங்கள், சகோதரர் உதவி. |
| தனுசு :- | சாதனை, முயற்சிகளில் வெற்றி, கொடுக்கல் வாங்கல், கெடுபிடி, காரிய சித்தி. |
| மகரம :- | இலாபதினம், பிரச்சினைகள்தீரும், தொழில் வளம், குழப்பம். |
| கும்பம் :- | நினைத்தது வெற்றி, பொன்பொருள்சேரும், உற்சாகம், பணவசதி. |
| மீனம் :- | போட்டிகள், பெரியோர் ஆசி, ஆன்மீக ஈடுபாடு, பணப்புழக்கம். |

# பூநகரியிலிருந்து யாழ். வருவோர் தினந்தோறும் எதிர்நோக்கும் அவலம்

(முழங்காவில்)

வெளியிடங்களிலிருந்து தினமும் காலை பூநகரிக்கு வரும் பேருந்துகள் நேரம் தாமதித்து வருவதால் பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

பூநகரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பேருந்து சேவை நாளாந்தம் இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் மன்னாரிலிருந்தும் முழங்காவிலிருந்தும், முட்கொம்பன் ஆகிய பிரதேசங்களிலிருந்து வரும் பேருந்துகள் பூநகரி வாடியடிப் பகுதிக்கு காலைவேளை பிந்தியே வருவதால் யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பயணிகள் உரிய நேரத்திற்கு செல்லமுடியாது கஷ்டப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

உத்தியோகத்தர்கள்,பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், சந்தை வியாபாரிகள், வர்த்தகர்கள ஆகியோர் இவ்வாறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக இப்பிரதேசங்களில் இருந்து வரும் பேருந்துகள் வாடியடிப்பகுதிக்கு காலை 7 மணிக்கும் 7.30 மணிக்கும் இடையில் வந்தால் பூநகரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்வோர் உரிய நேரத்துக்கு செல்ல முடியும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# 20 வருடங்களின் பின்னர் உதயசூரியனில் “பொங்கல்”

(மண்டைதீவு)

மண்டைதீவு உதயசூரியன் சனசமூக நிலையத்தின் பொங்கல் விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.அப்பகுதி கிராம சேவையாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை சிறுவர்களின் கலை நிகழ்வும் பெரியோர்களின் ஆசியுரையும் இடம்பெற்றது.

20 வருடங்களின் பின்னர் இச்சனசமூக நிலையத்தின் பொங்கல் விழா இம்முறை நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் மண்டைதீவை சேர்ந்த க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் கடந்த வருடம் நடைபெற்ற திறந்த சேவைiii நிர்வாகப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட பே. நிலே[illegible] மற்றும் பல்கலைக்கழக இளம் பட்டதாரிகள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (23)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(மன்னார்)



மன்னார் மாவட்டத்தில் கட்டாக்காலி தெருநாய்களின் தொகை அதிகரித்துள்ளமையினால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.குறிப்பாக நடந்து செல்பவர்கள் மற்றும் துவிச்சக்கர வண்டியில் செல்பவர்களை கடிக்கும் அளவிற்கு குறித்த தெரு நாய்கள் செயற்படுகின்றன.

அது மட்டுமின்றி பஸ் தரிப்பிடம் உள்ளிட்ட பொது இடங்களை அசுத்தப்படுத்தும் நிலையும் குறித்த தெரு நாய்களினால் ஏற்பட்டுள்ளது.

எனவே, கட்டாக்காலி தெரு நாய்களைப் பிடித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் நகர சபையிடம் மன்னார் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# முல்லைத்தீவு வலயத்திற்குள்ளான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம்

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற வலயத்திற்குள்ளான வருடாந்த ஆசிரியர் இடமாற்றசபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக, 05.01.2012 ஆம் திகதி தொடக்கம் செயற்படும்படியாக இட மாற்றம் வழங்கப்பட்ட 133 ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் தற்போது மாற்றப்பட்டுள்ள பாடசாலைகளின் விபரம் வெளியிடப்படுகின்றது.

திருமதி வி.தங்கராஜா (வள்ளிபுனம் க.உ.வி), செ.சுந்தரலிங்கம் (புது.மத்திய கல்லூரி), திருமதி ச.தேவசகாயம் (மந்துவில் அரசரட்ணம் வித்தி.), திருமதி ம.கண்ணதாசன் (வள்ளிபுனம் க.உ.வி), ந. சாந்தகிரிநாதன் (புது. மத்திய கல்லூரி), ம.கேதீஸ்வரன் ( தேவிபுரம் அ.த.க), ம.கெரால்ட் ( இரணைப்பாலை றோ.க), வை.ஜெயராசா (புது.மத்திய கல்லூரி), வி.ஜெய பாலன் (விசுவமடு ம.வி), பே.சுரேஸ் (தேவிபுரம் அ.த.க), கி.தோமஸ் மெயிட்லன் (உடையார்கட்டு ம.வி), திருமதி இ.சிவகுமார் (இருட்டுமடு த.வி), திருமதி இ.கதிர்காமநாவலர் (விசுவமடு ம.வி), திருமதி தெ.வீரசிங்கம் (பாரதி வித்தி), திருமதி ர.ரமேஸ் (உடையார்கட்டு ம.வி), பெ.பால கிருஷ்ணன் (விசுவமடு ம.வி), திருமதி சி.கணேச லிங்கம் (உடையார் கட்டு ம.வி), திருமதி அ.தம்பி ராசா (உடையார்கட்டு ம.வி), திருமதி பு.பகிரதன் (உடையார்கட்டு ம.வி), திருமதி இ.ஜெகந்தன் ((உடையார்கட்டு ம.வி), திருமதி வி.ஜெயநந்தன் (புது. மத்திய கல்லூரி), திருமதி ர.கிருஷ்ண குமார் (உடையார்கட்டு ம.வி), செல்வி. இ.ராஜினி (புது.மத்திய கல்லூரி), திருமதி அ.வரதராசா (விசுவமடு ம.வி), திருமதி றோ.திருவருட்செல்வி (பாரதி வித்தி), திருமதி சு.ரவிச்சந்திரன் (தேவிபுரம் அ.த.க), திருமதி அ.றொபின்சன் (தேவிபுரம் அ.த.க), திருமதி கீ.மரியராசா (விசுவ மடு ம.வி), திருமதி சா.ரகுபரன் (வள்ளிபுனம் க.உ.வி), திருமதி இ.முரளிதரன் (வள்ளிபுனம் க.உ.வி), சி.சுதாகரன் (வள்ளிபுனம் க.உ.வி), செல்வி மனோரஞ்சிதம் (சுதந்திரபுரம் அ.த.க), க.றேமன் (சுதந்திரபுரம் அ.த.க.), செல்வி க.ஜெயலக்ஷ்மி (இருட்டுமடு த.வி), திருமதி செ.பஞ்ச லிங்கம் (குரவில் த.வி), பொ.செந்தூர்செல்வன் (உடையார்கட்டு ம.வி), திருமதி பா.விஸ்வநாதன் (இருட்டுமடு த.வி), திருமதி இ.சிவகுமார் (உடை யார்கட்டு ம.வி), சி.மதனராசன் (குரவில் த.வி), சி.ரங்கநாதன் (பாரதி வித்தி), சி.கேதீஸ்வரன் (உடையார்கட்டு ம.வி), திருமதி ச.மகேந்திரராசா (கைவேலி கணேச வித்தி), திருமதி சு.ஆதித்தன் (உடையார்கட்டு ம.வி), தி.திலகேஸ்வரன் (உடை யார்கட்டு ம.வி), திருமதி இ.கனகரட்னம் (உடை யார்கட்டு ம.வி), திருமதி ஆ.விஜயகுமார் (கைவேலி கணேச வித்தி.), திருமதி கு.விஜயராசா (வேணா வில் ஸ்ரீ முருகானந்தா), திருமதி க.கனகேஸ்வரன் (விக்னேஸ்வரா வித்தி), திருமதி சி.துரைராசா (வள்ளிபுனம் க.உ.வி), திருமதி ந.பிரேம்குமார் (இரணைப்பாலை றோக.), திருமதி சா.கமலநாதன் (கைவேலி கணேச வித்தி). திருமதி போ.அக்னேஸ் வரன் (விசுவமடு ம.வி), திருமதி ச.நவரட்ணம் (புது.மத்திய கல்லூரி), திருமதி க.பரமேஸ்வரன் (இரணைப்பாலை றோ.க) திருமதி தெ.ஜெயபாலன் (உடையார்கட்டு ம.வி) திருமதி வ.அசெளகராசா (இரணைப்பாலை றோ.க), திருமதி வ.ரவிச்சந்திரன் (புது.றோ.க), திருமதி இ.விஜயரட்ணம் (மந்துவில் அரசரட்ணம் வித்தி), திருமதி வி.மோகனதாஸ் (வள்ளிபுனம் க.உ.வி), திருமதி ச.சசிக்குமார் (ஆனந்தபுரம் அ.த.க), திருமதி ம.மங்களகுமார் (புது. மத்திய கல்லூரி), திருமதி தி.ரஞ்சித் (விசுவமடு ம.வி), செல்வி செ.யோகராணி (சிலாவத்தை த.வி), திருமதி பி.ஆனந்தராசா (வித்தியானந்தக் கல்லூரி), திருமதி நி.விக்னேஸ்வரன் (முல்லைத்தீவு ம.வி), திருமதி ஜெ.மோகனராஜ் (வற்றாப்பளை ம.வி), திருமதி உ.ஆனந்தராசா (தண்ணீர் ஊற்று இ.த.க), திருமதி நி.கமலேஸ்வரன் (வற்றாப்பளை ம.வி), திருமதி அ.பகீரதன் (அளம்பில் றோ.க), திருமதி மு.பரமேஸ்வரன் (சிலாவத்தை த.வி).


(17) (தொடரும்....)

## சங்கிலியை அபகரித்த இருவர் கைது

பெந்தர - அல்பிட்டிய வீதியின், பரப்புவ பகுதியில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவரின் சங்கிலியை அபகரித்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊராகஸ் சந்தியில் வெளிநாட்டுப் பிரஜையிடமிருந்து அறுபது ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை குறித்த இரு இளைஞர்களும் பறித்துச் சென்றுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கொலுவாவமுல்ல பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அல்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



கிளி. செம்மண்குன்று அ.த.க பாடசாலையில் நேற்று நடைபெற்ற பொங்கல் விழாவிலும், கால்கோள் விழாவிலும் விருந்தினர்கள் பாடசாலை அதிபர் இ.கலைச்செல்வனால் வரவேற்கப்படுவதையும், புதிய மாணவர்களையும், பெற்றோர்களையும் காணலம். (112)




பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவில் பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரனுடன் விருந்தினர்கள் புதிய அனுமதி பெற்ற மாணவர்கள் மாலைசூட்டப்பட்டு அமர்ந்திருப்பதையும் காணலம். (112)

# வடமராட்சிக்கு பெருமை சேர்த்தவர்கள்

வடமராட்சி
உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களின் உள்ளக்கிடக்கைகள்.

## எனது ஊரினை மேம்படுத்துவேன்



கௌதமி பாலசுந்தரம்

நான் உடுப்பிட்டியில் வசிக்கிறேன். எனது ஆரம்பக் கல்வியை யாழ். கரணவாய் தாமோதரா வித்தியாசாலையில் கற்றேன். நான் புலமைப் பரிசில் பரீட்சையில் 3 புள்ளி குறைவானதால் சித்தியடையவில்லை. எனவே பின்னர் கல்வியில் ஈடுபாடு கொண்டு படிக்க ஆர்ம்பித்தேன்.

தரம் 6 இலிருந்து யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இதன் பயனாக சாதாரணதர பரீட்சையில் 6 A, 3 B ஐப் பெற்றேன். பின்னர் உயர்தரப் பரீட்சையில் நான் கணிதத் துறையைத் தெரிவு செய்தேன்.

பொறியியலாளராக வந்து எனது ஊரினை மென்மேலும் விரிவுபடுத்துவதே எனது இலட்சியமாகும்.

## சமூகத்தில் பின்தள்ளப்பட்டோருக்கு உதவுவேன்



துளசி அமிர்தலிங்கம்

நான் வல்வெட்டியில் வசிக்கின்றேன். ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்தரம் வரை யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலேயே கற்றேன்.

நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 131 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தேன்.

எனது அப்பா மோட்டார் திருத்துனர். அம்மா வீட்டுப் பணி செய்து வருகின்றார். நான் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 3A, 5B, C எனும் பெறுபேற்றினைப் பெற்றேன். தற்போது உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் 2 A, B எனும் பெறுபேற்றினைப் பெற்றுள்ளேன்.

எதிர்காலத்தில் சமூக சேவையாளராக வந்து சமூகத்தில் பின்தள்ளப்பட்டிருக்கும் மக்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.



ஜெசிதா ஜெகதீசன்

நான் இமையாணனில் வசிக்கின்றேன். நான் ஆரம்பக் கல்வியினை யாழ். கரணவாய் தாமோதர வித்தியாசாலையில் கற்று தரம் ஐந்து வரை கல்வி கற்றேன். அங்கு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 114 புள்ளியைப் பெற்றேன்.

எனது தந்தை மெக்கானிக் தொழிலைப் புரிகின்றார். எனது தாய் வீட்டுப் பணி புரிகின்றார். நான் ஆறாம் தரத்திலிருந்து உயர்தரம் வரை யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் A, 2B, 5C,S என்னும் பெறுபேற்றினைப் பெற்றேன். தற்போது உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் 2A, B பெறுபேற்றினைப் பெற்றுள்ளேன்.

நீதியை நிலைநாட்டக்கூடிய ஒரு சட்டத்தரணியாக வருவதே எனது எதிர்கால இலட்சியமாகும்.

## மக்களுக்கு உதவுவேன்

தாட்சாயினி தேவராஜா



எனது தந்தை நகைத்தொழில் செய்பவர். தாயார் மல்லிகாதேவி வீட்டுப்பணி செய்பவர். தரம் 1 முதல் உயர்தரம் வரை யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 2 A, 2 B, 5 C பெறுபேற்றினைப் பெற்று உயர்தரத்தில் கலைப்பிரிவினைத் தெரிவு செய்தேன். உயர்தரப் பரீட்சையில் 2A B பெறு பேற்றினைப் பெற்றுள்ளேன்.

எனது கல்வித் தகைமை பிறருக்கு பயன்படக்கூடிய வகையில் பணியாற்றுதலே எனது எதிர்கால இலட்சியமாகும்.

நேர்காணல் விசிந்தன்

## தேசிய கூடைப்பந்து அணியில்







(யாழ்ப்பாணம்)

கிரிடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட பாடசாலைகளின் இரண்டு மாணவர்கள் தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவாகியுள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த தயாளன் மற்றும் யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கௌரி ஆகியோரே தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (20)

## மெய்வன்மை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மெய்வன்மை சங்கம் நடத்தும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் எதிர்வரும் 21ஆம் திகதி தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட மெய்வன்மை சங்கம் தெரிவித்துள்ளது. (93)



**இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியினால் நடத்தப்பட்ட நூற்றாண்டு விழா கால்பந்துப் போட்டியில் கிண்ணத்தை வென்ற ஞானமுருகன் அணியினர் வெற்றிக் களிப்பபை வெளிப்படுத்துவதைக் காணலாம். நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் றோயல் அணியை 1-0 என்ற கணக்கில் வென்று ஞானமுருகன் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93)**

## மாவட்ட மட்ட கரப்பந்துப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினரால் தேசத்தின் மகுடத திற்கான (தயட்ட கிருள்ள) ஆண்கள் மட்டும் பங்குகொள்ளும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தபடவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் பங்குகொள்ளவிரும்பும் மாவட்ட அணிகள் போட்டி நடைபெறும் தினமன்று காலை 7.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத திற்கு சமூகம் தந்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுக் கொள்கிறார்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் இல: 0776621255 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு முழு விபரங்களையும் தெரிந்து கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வள்ளம் தாங்கல், நீச்சலில் வெற்றியீட்டியோர் விபரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபையினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் வள்ளம் தாங்கல் மற்றும் நீச்சல் போட்டிகளில் வெற்றியீட்டியோரின் விபரம் வருமாறு:

வள்ளம் தாங்கல்: அரியராசா டயஸ், பொன்னுத்துரை ரொபின்சன், மரியதாஸ் சில்பட் முதலாமிடத்தையும், கண்ணன் சுதர்சன், கோமர் டேசியன், யோகம் யூட் இரண்டாமிடத்தையும், செல்லக்குமார் ரங்கன், றகீம் வசந்தன், தங்கையா ரஞ்சன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

நீச்சல் போட்டி:

றோக்ஸ் ராலின் முதலாமிடத்தையும், மாக்கயான் பிரதீபன் இரண்டாமிடத்தையும், சூ. டெலிங்டன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். (எப்.எஸ்)

## சமநிலையில் நிறைவடைந்த ஸ்ரான்லி, மகாஜனா ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

மகாஜனாக் கல்லூரி அணிக்கும் ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்குமிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இப்போட்டி அண்மையில் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தல் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மகாஜனாக் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிலோசன் 22, அஜித் 20, ஜனந்தன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மாதவன், கம்ஷிகன் தலா மூன்று, மதுமதன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதன் காரணமாக இப்போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. இதில் கம்ஷிகன் 49, மதன் 27, தர்சன் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அஜித் ஆறு, மதுசன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (93)

## அவுஸ்ரேலியாவுக்கு இந்தியாவில் பதிலடி

**ஶ்ரீநிவாசன்**


(புதுடில்லி)

அவுஸ்ரேலிய அணி இந்தியாவுக்கு வரும்போது தற்போதைய தோல்விக்கு நாம் பதிலடி கொடுப்போம் என இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் நாராயண சுவாமி ஶ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணி தனது உள்நாட்டு சூழ்நிலைகளில் சிறப்பாக விளையாடுகிறது. அவர்கள் இங்கு வரும்போது அது வித்தியாசமாக இருக்கும்.

இந்தியாவுக்கு அடுத்ததாக நியூசிலாந்து அணி வருகிறது. அதன்பின் இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகள் வரவுள்ளன. இம்மூன்று அணிகளையும் எமது சொந்த மண்ணில் நாம் தோற்கடிப்போம். அவர்களால் இங்கு எம்மை வெல்ல முடியாது. இதனால் நாம் மிக மகிழ்ச்சியடைவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எமது இலக்கு ஆஷஸ் தொடர்



(பேர்த்)

ஆஷஸ் தொடரை வென்றெடுப்பதே எமது இலக்கென அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆத்தர் கூறியுள்ளார். அவுஸ்ரேலிய அணி மீண்டும் டெஸ்ட் அணிகளுக்கான தரப்படுத்தலில் முதலிடத்தினை பெறவேண்டும்.

இந்த இலக்குகளை எட்டுவதற்கு போடர் கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் கிரிக்கெட் தொடர் அவுஸ்ரேலிய அணிக்கு சாதகமாக அமைந்துள்ளதாகவே நான் நினைக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## சீன வீராங்கனை சம்பியன்



(கோலாலம்பூர்)

மலேசிய ஓப்பன் பட்மின்ரன் தொடரின், பெண்கள் ஒற்றையர் பிரிவில் சீனாவின் இகான் வாங் சம்பியன் பட்டம் வென்றார். நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், சீனாவின் இகான் வாங், ஜிங் வாங் மோதினர். இதில் அபாரமாக ஆடிய இகான் வாங் 21-19, 21-11 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, சாம்பியன் பட்டம் வென்றார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், மலேசியாவின் சோங் வி லீ, ஜப்பானின் கெனிசி டாகோவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய சோங் வி லீ 21-6, 21-13 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டம் வென்றார்.

## 2ஆவது சுற்றில் முன்னணி வீரர்கள்

(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றுக்கு லீ நா, கிம் கிளிஜ்டர்ஸ் தகுதி பெற்றுள்ளனர்.

போர்த்துக்கல் வீராங்கனையை 2-0 என்ற செட்கணக்கில் வீழ்த்தி கிம் கிளிஜ்டர்ஸ் 2 ஆவது சுற்று முன்னேறியுள்ளார்.

இதேவேளை சீனாவின் லீ நா, ரஷ்ய வீராங்கனையை வெற்றிகொண்டு அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.






**பாகிஸ்தான், இங்கிலாந்து அணகளுக்கிடையிலான டெஸ்ட தொடர் இன்றைய தினம் டுபாயில் ஆரம்பமாகவுள்ளது. இதனை முன்னிட்டு இரு அணித் தலைவர்களான மிஸ்பா உல் ஹக், ஸ்ரோஸ் ஆகியோரால் நேற்றைய தினம் டெஸ்ட் தொடருக்கான கிண்ணம் அறிமுகம் செய்து வைக்கப் பட்டது.**

## கலந்துரையாடல்

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2012 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா சம்பந்தமான கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அனுரா காந்தன் தெரிவித்துள்ளார். (12)

## இந்திய அணி அறிவிப்பு

(சென்னை)

அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள முத்தரப்பு தொடர் மற்றும் ருவென்ரி-20, 17 பேர் கொண்ட இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அணி விபரம் வருமாறு: டோனி (கப்டன்), சேவாக் (துணை கப்டன்), சச்சின், கம்பீர், ஹோலி, ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னா, ரவிந்திர ஜடேஜா, அஷ்வின், உமேஷ் யாதவ், பிரவீண் குமார், வினய் குமார், மனோஜ் திவாரி, ராகுல் சர்மா, பார்த்திவ் பட்டேல், இர்பான் பதான், சகிர்கான்.

## ராகுல் ராவிட் மோசமான சாதனை

(பேர்த்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் இரு இனிங்ஸ்களிலும் போல்ட் முறையில் ராகுல் ராவிட் ஆட்டமிழந்தார். இதன் மூலம் அவர் டெஸ்ட் அரங்கில் அதிக முறை போல்ட் முறையில் ஆட்டமிழந்த அவுஸ்ரேலிய வீரர் அலன் போடரின் சாதனையை முறியடித்தார். ராகுல் ராவிட் இதுவரை 54 தடவைகள் போல்ட் முறையில் ஆட்டமிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நழுவிச் செல்லும் போக்கையே கூட்டமைப்பு கடைப்பிடிக்கிறது



## பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசியல் தீர்வு பேச்சுவார்த்தை மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளிலிருந்து நழுவிச் செல்லவும் அவற்றை தவிர்க்கவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. அப்படியாயின் அது ஆரோக்கியமான விடயமாக அமையாது என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்காவிட்டால் அரசு-கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடைபெறாது என்று அரசாங்கம் தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்று கூட்டமைப்புத் தெரிவித்துள்ளமை குறித்து விபரிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பல வழிகளிலும் கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் கடந்த காலங்களில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இது குறித்து கூறப்பட்டது. அத்துடன் சபாநாயகரும் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அனைத்து விடயங்களிலும் கைநழுவிச் செல்லும் போக்கை கொண்டுள்ளதாகவே நாங்கள் உணர்கின்றோம். அத்துடன் எதனை எடுத்தாலும் அதனை தவிர்த்துவிடும் போக்கையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

அதாவது வெளிநாடுகளில் இருந்து வருகின்ற கட்டளைகளை நிறைவேற்றும் செயற்பாட்டில் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளதா? என்ற சந்தேகம் ஏற்படுமளவுக்கு அவர்களின் நடவடிக்கைகள் உள்ளன. ஒருவேளை அவ்வாறு கூட்டமைப்பு செயற்படுமாயின் அது ஆரோக்கியமான விடயமாக அமையாது.

வடக்கு-கிழக்கு மக்கள் நாட்டின் ஏனைய மக்களுடன் இணைந்து செயற்படுவதற்கும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் தயாராக உள்ளனர். ஆனால தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அனைத்து விடயங்களிலும் நழுவல் போக்கை பின்பற்றுவதாகவே தெரிகின்றது என்றார்.

# கலைஞர்கள் பங்குகொள்ளும் "கலாபொல - 2012" நிகழ்வு

(கொழும்பு)



கலைஞர்கள் பங்கு கொள்ளும், "கலாபொல-2012" வெளிகள நிகழ்வு நெலும் பொக்குண மாவத்தையில் இடம்பெறவுள்ளது. ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்த வீதிநிகழ்வின் மூலம் கலைஞர்களும், பொது மக்களும் நன்மையடைவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1993 ஆம் ஆண்டு முதன் முதலாக இந்த வீதி நிகழ்வு ஆரம்பமானபோது 35 கலைஞர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

ஆனால், எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வின போது 300 இற்கும் அதிகமான கலைஞர்கள் கலந்து கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலை 8 மணி முதல் இரவு வரையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கலைஞர்களின் படைப்புக்களை பார்வையிடுவதுடன, அவற்றை கொள்முதல் செய்யவும் முடியும் என "கலாபொல 2012" ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இசட் புள்ளி தொடர்பான குளறுபடிகளில் ஆராய்வுக் குழு கவனம் செலுத்தவில்லை

## இலங்கையில் அறிமுகப்படுத்தியவரே குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இசட் புள்ளி முறைமையை பயன்படுத்திய போது ஏற்பட்ட குளறுபடிகள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என பேராசிரியர் று.்.பெல்டா ஓ தட்டில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இசட் புள்ளி முறைமையை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான று.்.பெல்டா ஓ தட்டிலே அறிமுகப்படுத்தினார். பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கு அமைய இசட் புள்ளிகளைக் கணிப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கையில் குறைபாடு காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் குறைபாடு தொடர்பில் அல்லது அதனை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த விடயம் குறித்து, உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் தலைவரும், தொழிநுட்பம் மற்றும் ஆய்வு அமைச்சின் செயலாளருமான தாரா விஜேத்திலக்க தெரிவிக்கையில்,

இசட் புள்ளிகள் தொடர்பில் அறிக்கையிடுவது ஜனாதிபதியால் தமக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

# 4 புனர்வாழ்வு நிலையங்கள் தொடர்ந்தும் இயங்கும்

(கொழும்பு)

படையினரிடம் சரணடைந்த புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் சமூகத்துடன் இணைக்கப்பட்டபோதும், 4 புனர்வாழ்வு நிலையங்களை தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இறுதிப் போரின் போது 11 ஆயிரம் புலிகள் படையினரிடம் சரணடைந்தனர். இவர்களில் இன்னும் 400 பேர் மாத்திரமே அவர்களின் குடும்பத்தவர்களுடன் இணைக்கப்பட வேண்டியுள்ளனர்.

இந்தநிலையில், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்படாவிட்டால் அவர்களையும் புனர்வாழ்வுக்கு உட்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் இதற்காக வவுனியா, பொலநறுவை ஆகிய இடங்களில் புனர்வாழ்வு நிலையங்களை தொடர்ந்தும் இயங்கச் செய்வது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, புனர்வாழ்வு வழங்கப்படுபவர்களில் 47 பேர் இந்த மாத இறுதியிலும் ஏனைய 300 பேர் அடுத்த மாதத்திலும் அவர்களின் குடும்பங்களுடன் இணைக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.



# பாரிய உபாதைக்கு உள்ளாகியிருக்கும் இலங்கையின் உயர் கல்வித் துறை

(கொழும்பு)

இலங்கையின் உயர்கல்வித் துறையில் பாரிய உபாதை இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கம்பகா பிரதேசத்தில் இடம்பெற்ற கட்சியின் செயற்பாட்டாளர்களின் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் சம காலத்தில் பாரிய அளவில் மோதல்களும், அசம்பாவிதங்களும், போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. இதன்காரணமாக மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், உயிராபத்துக்கள் அதிகரிக்கக் கூடியநிலை ஏற்படும். காயம் ஏற்பட்டவுடன், கட்டுப் போடுவதை போல இருக்கின்ற பிரச்சினைகளை மூடி மறைக் கின்றார்கள்.

எனினும், அந்தக் காயம் ஆறியபாடில்லை, படிப்படியாக பெரிதாகித்தான் செல்கின்றது. எனவே, நெருக்கடிகளை முறையாக ஆராய்ந்து இறுதியான ஒரு முடிவு எட்டப்பட்ட வேண்டும் என்றார்.

## மேர்வின் தொடர்பில் விசாரணை



(கொழும்பு)

தமக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராயுமாறு அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் களனிப் பிரதேச சபைத் தலைவர் பிரசன்ன ரணவீர ஆகியோர், தனித்தனியே பொலிஸமா அதிபரிடம் மனுக்களைக் கையளித்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கை அடிப்படையில், அவற்றை விசாரணை செய்ய பிரத்தியேக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன இதனைத தெரிவித்துள்ளார். இந்தக் குழு தற்போது தமது பணிகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுதந்திரதினத்தை முன்னிட்டு அரச நிறுவனங்களை அலங்கரிக்க ஏற்பாடு

(கொழும்பு)



சுதந்திர தினத்தை முன்னிட்டு அரச நிறுவனங்களை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

64 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி மூன்றாம், நான்காம் திகதிகளில் அனைத்து அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடியை ஏற்றுவதற்கும் மற்றும் மின் விளக்குகளால் அலங்கரிப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளர்களுக்கும், திணைக்களத்தின் பிரதிநிதிகளுக்கும், மாவட்ட செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் தெளிவுபடுத்தியதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கைக்கு அமைய அனைத்து அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டும் எனப் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# கட்சி தாவுபவர்களின் நோக்கத்தைக் கண்டறிய முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளிலிருந்து ஆளும் கட்சியுடன் இணைந்து உறுப்பினர்களின் தகுதி மற்றும் நோக்கங்களை ஆராய வேண்டியது அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுனரின் காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய கொழும்பு மாநகர சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு உறுப்பினர் அசாத் சாலி இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாநகர சபை கூட்டத்தின் போதும் தாம் இது குறித்து. விசேட உரையொன்றையும் ஆற்றிவிட்டு, உறுப்பினர் பதவியிலிருந்து விலகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# "1929" சிறுவர் நலன்புரி சேவைக்கு நிரந்தர உறுப்புரிமை அங்கத்துவம்

(கொழும்பு)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் 1929 என்ற சிறுவர் நலன்புரி சேவைக்கு நெதர்லாந்தில் அமைந்துள்ள சர்வதேச சிறுவர் சேவை நிலையத்தின் நிரந்தர உறுப்புரிமை கிடைத்துள்ளது.

188 நாடுகள் இதில் அங்கம் வகிப்பதுடன் 44 நாடுகளுக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. நிரந்தர உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டமை இலங்கை சிறுவர் நலன்புரி சேவைக்குக் கிடைத்த பாரிய வெற்றி என சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். மிகவும் குறுகிய காலத்தில் நிரந்தர உறுப்புரிமை கிடைத்தமை மகிழ்ச்சியளிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# 27 கோடி ரூபா வருமானம்

(கொழும்பு)

கடந்த ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலப் பகுதியினுள் சரக்குப் போக்குவரத்தின் ஊடாக, புகையிரத திணைக்களம் 27 கோடி ரூபாவினை வருமதியாகப் பெற்றுள்ளது.

புகையிரதத்தின் ஊடாக சரக்குகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சிறந்த முறையில், மேற்கொள்ளப்படுவதன் காரணமாக தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் இந்த சேவையை நாடுவதாக புகையிரத திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# கட்டார், ஓமான் நாடுகளிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

(கொழும்பு)

ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தும் அறிவித்தலை அடுத்தே இது தொடர்பில் ஆராயப்படுவதாக இலங்கையின் பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது 40 ஆயிரம் பெரல் மசகு எண்ணெய்யை நாளொன்றுக்கு ஈரானில் இருந்து இறக்குமதி செய்கிறது.

இந்த எண்ணெய்யே 1960 களில் அமைக்கப்பட்ட சுத்திரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படுகின்றன. அத்துடன் சவூதி அரேபியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்யும் இங்கு சுத்தகரிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஈரான் மீது அமெரிக்காவின் பொருளாதார தடை, எண்ணெய் இறக்குமதியைப் பாதிக்கும் என்ற அடிப்படையில் நேற்று இலங்கை வந்தடைந்த கட்டாரின் மன்னருடன் பேச்சு நடத்தி கட்டாரில் இருந்து மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்ய முயற்சிக்கப்படும்.

அத்துடன் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வருகைத் தரவுள்ள ஓமானின் எரிபொருள் துறை அமைச்சருடன் மசகு எண்ணெய் இறக்குமதி தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

# தனியார் சுதேச மருந்தகங்களில் ஆங்கில மருந்துப் பாவனை

யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொது மக்களின் முறைப்பாட்டையடுத்து பிராந்திய சுகாதாரப் பணிமனையின் உத்தியோகத்தர் குழு தனியார் சுதேச மருத்துவ நிலையங்களில் நடத்திய திடீர் பரிசோதனையில் இதுவரை ஐந்து சுதேச மருத்துவ நிலையங்களில் ஆங்கில மருந்துப் பாவனை கண்டுபிடிக்கப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின் தனியே சுதேச மருத்துவ முறையைப் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்ட தனியார் மருத்துவ நிலையமொன்று மூடப்பட்டுமுள்ளது.

சுதேச மருத்துவ நிலையங்களில் இவ்வாறான ஆங்கில மருந்துப் பாவனை தொடர்பான முறைப்பாடுகள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு தொடர்ந்து கிடைத்த வண்ணமுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளால் மக்களின் உயிருக்கு முக்கியமாக சிறுவர், குழந்தைகளுக்கு உயிராபத்து ஏற்படும் ஆபத்து உள்ளது. எனவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் சுதேச மருத்துவர்கள் ஆங்கில மருந்துப் பாவனையை உடனடியாக நிறுத்துமாறும் தொடர்ந்தும் ஈடுபட்டால் அவர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பொது மக்களும் உங்களது பகுதியில் சுதேச மருத்துவர்கள் யாராவது ஆங்கில மருந்துப் பாவனையில் ஈடுபடுவதை அறிந்தால் உடனடியாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறியத் தருமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# ஜே.வி.பி.யில் ஏற்பட்டுள்ள பிளவு ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தல்

(கொழும்பு)

ஜே.வி.பி. கட்சியில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள பிளவு நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகும். என ஜே.வி.பி.யிலிருந்து பிளவடைந்து சென்ற கிளர்ச்சிக் குழுவினர், ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கைக் கொண்டவர்கள் என அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பொருளாதார நலன்களை மேம்படுத்தும் நோக்கில் அரசாங்கம் பாரிய அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

எனினும் சில தரப்பினர் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய இடங்களில் கலகங்களை உருவாக்க முயற்சிக்கின்றனர். சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இதற்கு இடமளிக்கக்கூடாது என வும் அமைச்சர் மைதிரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

# காணி அதிகாரம் வழங்காவிட்டால் தமிழர் வரலாறு அழிக்கப்படும் சாத்தியம்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துரைரட்ணம்

(மட்டக்களப்பு)

காணி அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால் தமிழர்களின் வரலாறு அழிக்கப்படக் கூடிய அபாயம் எழுந்துள்ளதாக கிழக்கு மாகாணசபை 'உறுப்பினர் துரைரட்ணம் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத்திற்கு காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனத் தெரிவித்துள்ளார்.

காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவித்து கிழக்கு மாகாண சபையில் துரைரட்ணம் பிரேரணை ஒன்றை கொண்டு வந்தார். இதன்போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இவ்வாறு காணி அதிகாரம் வழங்கப்படாவிட்டால் அரசாங்கம் தமிழர்களின் வரலாற்றை அழிக்க முயற்சிப்பதாகவே கருத வேண்டும். போர் காரணமாக சகல இன சமூகங்களும் காணிப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. காணிப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு அரசாங்கம் ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

மத்திய அரசாங்கம், மாகாண சபைகளுக்கு எதுவிதமான காணி அதிகாரங்களையும் வழங்கவில்லை. கிழக்கில், தொடரூந்துத திணைக்களம், வனப்பாதுகாப்புத் திணைக்களம், இராணுவம் ஆகியவற்றுக்கே அதிகளவு காணி உரிமை காணப்படுகின்றது.

கஜுவத்தை பிரதேசத்தில் ஐந்து கிலோமீற்றர் நீளமும், ஒரு கிலேமீற்றர் அகலமும் உடைய காணியொன்றை கடற்படையினர் பயன்படுத்துகின்றனர்.

இவ்வளவு பாரிய காணி அவர்களுக்கு தேவையில்லை. ஒரு வளத்தை அழித்து மற்றொரு வளத்தை உருவாக்குவது பொருத்தமற்றது. இது சிறுபான்மை சமூகத்திற்கு இழைக்கு அநீதியாகும் என அவர் தமது பிரேரணையின் போது குறிப்பிட்டார்.

# நீரில் மூழ்கி மூவர் மரணம்

(மட்டக்களப்பு)

வந்தாறுமூலைக் கடலிலும், சிலாபம் பகுதியிலும் நீரில் மூழ்கி மூவர் உயிரிழந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலை பிரதேசத்திலுள்ள கடலில் நேற்றுத் திங்கட்கிழமை காலை நீராடியபோது ஒருவர் பலியாகியுள்ளார். வந்தாறுமூலை பிரதேசத்தைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளரான கே.சந்திரன் (வயது 40) என்பவரே இவ்வாறு பலியானவர் ஆவார்.

வந்தாறுமூலை பிரதேசத்திலுள்ள கிருஷ்ணன் கோவிலில் திருபபாவை விழாவின் இறுதிநாளான நேற்றையதினம் காலை விசேட பூஜை வழிபாடுகளுடன் தீர்த்தோற்சவம் நடைபெற்றது. சுவாமி கடலில் தீர்த்தமாடிய பின்னர் ஏனையோர்கள் கடலில் நீராடியபோதே மேற்படி நபர் நீரில் மூழ்கிப் பலியானார்.

இவரது சடலம் தற்போது செங்கலடி மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சிலாபம் கொஸ்வத்தை பகுதியிலுள்ள நீர்த்தேக்கமொன்றில் நீராடுவதற்குச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை ஐந்து மணியளவில் இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மடோல்சீம மற்றும் லுணுவில பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் தற்போது மாரவில வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

# நுவரெலியாவில் உறைபனி

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று திங்கட்கிழமை காலை வெப்பநிலையின் அளவு 3.8 பாகை செல்சியஸாகக் குறைந்திருந்ததுடன், தரையில் பனிக்கட்டியும் காணப்பட்டது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சிறு மழைத் தூறலைத் தவிர பெரும்பாலான பகுதிகளில் சீரான காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் அதிகாலை வேளைகளில் உறைபனி காணப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தின் வெப்பநிலை இன்னும் சில நாட்களில் வழமைக்குத் திரும்புமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# புதையல் தோண்டிய 10 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான வெளகெதர தோட்ட முதலாம் இலக்க பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்த 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட கெப் வாகனம் மோட்டார் சைக்கிள் இரண்டு கையடக்கத் தொலைபேசி 07 இரும்பு ஆயுதங்கள் என்பன வாரியபொல பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்கள் வாரியபொல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


# கொழும்பு நகரில் உள்ள விளம்பரப் பலகைகளுக்கு வரி

(கொழும்பு)

கொழும்பு நகரின் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் பொருத்தப்படும் விளம்பரப் பலகைகளுக்கு வரி அறவிட கொழும்பு மாநகர சபை தீர்மானித்துள்ளது. பிரதி நகர முதல்வர் டைட்டஸ் பெரேரா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த விளம்பர வரி மூலம் கிடைக்கப் பெறுகின்ற வருமானம் நகர அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படும். சமூக நலன் நோக்கில் இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையிலேயே, கொழும்பு மாநகர சபை இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்த கட்டார் அமீர் ஷேக் ஹமட் பின் கலீபா அல் தானி மற்றும் அந்நாட்டு முக்கியஸ்தர்களுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் உயரதிகாரிகளுக்கும் இடையில் ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இவ்வொப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து இரு நாட்டுத் தலைவர்களும் அலரிமாளிகையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

# ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்கா பிரசன்னம்

அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமையகமான பென்ரகன் [Pentagon] கடந்த ஜனவரி 5 (2012) திகதி அடுத்த பத்து ஆண்டுகளுக்கான தமது பாதுகாப்பு திட்டத்தை வெளியிட்டது. இந்த புதிய திட்டத்தில், பாதுகாப்புச் செலவீனத்தை குறைப்பதில் கூடிய கரிசனை செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, கடந்த காலத்தைப் போலல்லாமல், எதிர்வரும் பத்தாண்டுகளுக்கு இரு போர்முனைகளை ஒரே காலப்பகுதியில் திறப்பதை கட்டுப்படுத்துவது அல்லது நிறுத்துவது அமெரிக்காவின் புதிய பாதுகாப்புத் திட்டங்களில் முக்கியமான விடயங்களில் ஒன்று.

சுமார் 487 பில்லியன் அமெரிக்க டொலரகளை எதிர்வரும் பத்தாண்டுகளுக்குள் குறைப்பதற்கு பென்ரகன் திட்டம் தீட்டியுள்ளது. இதன் காரணமாக, அமெரிக்காவின் விமானப்படை அண்ணளவாக 200 விமானங்களை இழப்பதோடு, அமெரிக்க இராணுவத்தின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம் இராணுவத்தால் குறைக்கப்படும்.

இத்தகைய ஒரு இறுக்கமான முடிவை எடுத்த ஜனாதிபதி ஒபாமாவும், பென்ரகனும் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் அமெரிககாவின் பிரசன்னத்தை அதிகரிப்பதற்கான எத்தகைய விலையையும் கொடுக்க தயாராகவுள்ளனர். அந்த வகையிலேயே, அவுஸ ரேலியாவின் டார்வின் பகுதியிலும், தேவையேற்படின் பிலிப்பைன்சிலும் அமெரிக்காவின் இராணுவ முகாம்களை நிறுவுவதற்கான பணிகள் முன்னெடுக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தோன்றியுள்ளன.

எதற்காக ஆசிய - பசுபிக் பிராந்தியம் இலக்கு வைக்கப்படுகிறது?

ஆசிய - பசுபிக் பிராந்தியத்திலேயே, ஆசியான் - தென்கிழக்கு ஆசிய நாடுகளின கூட்டமைப்பு [ASEAN], சார்க -பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய கூட்டமைப்பு [SAARC] மற்றும் பசுபிக் தீவுகளின் பேரவை [PIF] ஆகிய கூட்டமைப்புக்கள் உள்ளடங்கலாக சுமார் ஐம்பது நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த ஐம்பது நாடுகளுக்குள்ளேயே, அமெரிக்காவின் கண்கள் ஆழமாக பதிந்துள்ள சீனா, இந்தியா, ஆப்கானிஸ்தான், வடகொரியா. பாகிஸ்தான், இந்தோனேசியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளும் உள்ளடங்குகின்றன. அதேவேளை, வளைகுடாப் பிராந்தியத்தில் ஈரானின் ஏவுகணை மற்றும் அணுஆயுத பரிசோதனைத்திட்டம் போன்றவற்றால் அதிகரித்து வரும் பதற்ற நிலையைத் தொடர்ந்து, அமெரிக்கா இரகசிய காய்நகர்த்தல்களையும் செய்யவேண்டிய தேவையெழுந்துள்ளது.

அமெரிக்காவுக்கு பொருளாதார ரீதியாக அச்சுறுத்தல் விடுக்கும் சீனாவையும், இராணுவரீதியாக அச்சுறுத்தல் விடுப்பதற்கான முனைப்பில் ஈடுபட்டுள்ள ஈரானையும் எதிர்கொள்வதற்கான பொதுத் தளமாகவும், பிரதான தளமாகவும் ஆசிய-பசுபிக் பிராந்தியமே திகழப்போகிறது. இவற்றின அடிப்படையிலேயே, அடுத்த பத்தாண்டுக்கான அமெரிக்காவின் பாதுகாப்புத் திட்டத்தில் ஆசிய-பசுபிக் பிராந்தியத்துக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவிற்கான தனது பதிலாளர்களாக இந்தியாவையும், ஜப்பானையும் பயன்படுத்துவதை விட்டு, அமெரிக்காவே நேரடியாக களத்தில் இறங்கியுள்ளது. இது, ஆசிய பிராந்தியத்தின் முக்கியத்துவத்தையும், இங்கு எதிர்காலத்தில் மேலெழக்கூடிய தீவிரமான நெருக்கடி நிலைகளையுமே கட்டியங்கூறுகிறது. இதற்கு மிகச்




சிறந்த அண்மைக்கால உதாரணமாக, அமெரிக்கா இராஜாங்க செயலாளர் கிலாரி கிளிங்டனின் பர்மாவிற்கான (மியான்மார்) சுற்றுப்பயணத்தையும், அங்கு இடம் பெற்ற சம்பவங்களையும் குறிப்பிடலாம்.

சீனாவுடன் நெருக்கமான பிணைப்பை கொண்ட ஒரு இராணுவ ஆட்சியுடைய நாடாகவே பர்மா மிக அண்மைக்காலம் வரை இருந்துவந்தது. ஆனால், ஆசியாவில் தனது புதிய சகாப்தத்தை உருவாக்குவதற்காக அமெரிக்கா புறப்பட்டுள்ளது என்பதன் அடையாளமாக கிலாரி கிளிங்டன் அவரகளின் பர்மாவிற்கான சுற்றுப்பயணம் அமைந்துள்ளது.

இந்தப் பயணத்தின் ஊடாக, சீனாவின் பின்னணியுடன் பர்மாவில் மேற்கொள்ளபபட்டு வந்த அணைக்கட்டுமானமொன்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், ஜனநாயகத்துக்காக போராடும், சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற, ஆங்சாங்-சுகியுடன், கிலாரி அவர்கள் மேற்கொண்ட சந்திப்பும், அதனைத் தொடர்ந்து ஆங்சாங்-சுகியின் ஜனநாயகத்துக்கான தேசியலீக் அரசியல் கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக பர்மாவின் தற்போதைய ஆட்சியாளர்களால் காட்டப்பட்ட பச்சைக்கொடியும் குறிப்பிடத்தக்கவை.

மேலும், சுமார் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமது இனத்தின் விடுதலைக் காக போராடிவரும் கச்சின் (Kachin) போராளிகளுடன் சமாதான முன்னெடுப்பு களுக்கான நடவடிக்கைகள் ஆரம்பிப்பது போன்ற பர்மாவின் ஜனநாயகத்துக்கான பல்வேறு மறுசீரமைப்பு நடவடிக்கை களுக்கு பர்மாவின் ஆட்சிப்பீடம் இணங்கி யுள்ளமை பர்மா-சீனா உறவில் உருவாகத தொடங்கியுள்ள ஒரு இடைவெளியின் ஆரம்பப்புள்ளியாகவும், அமெரிககாவுக்கும் பர்மாவிற்கும் இடையில் தோற்றம் பெற்றுள்ள உறவின் ஆரம்பமாக வும் பார்க்கலாம்.

இது, பொருளாதார ரீதியாக அமெரிக் காவுக்கு சவால்விட்டுள்ள சீனாவுக்கு, அமெரிக்காவால் விடுக்கப்பட்டுள்ள ஒரு இறுக்கமான சமிக்ஞையும் மறைமுக எச்சரிக்கையும் ஆகும். அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா அவர்களின் ஆசியா வுக்கான அண்மைய சுற்றுப்பயணமும், அவுஸ்ரேலியாவிலும் அதன் பின்னர் பென்ரகனில் அவர் ஆற்றிய உரையும் இதன் ஒரு அங்கமே.

ஆகவே, சீனாவை பலவீனப்படுத்த வேண்டிய கட்டாயம் அமெரிக்காவுக்கு மிக விரைவாகவே தோன்றிவிட்டது என்பது கண்கூடு. அதன் பிரதான நகர்வாக, சிங்கத்தின் கோட்டைக்குள்ளேயே புகுவது போலவே, ஆசியாவிற்குள் புகுந்தே சீனாவுக்கான சாவலை விட அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இதனை ஒரு சாணக்கிய இராஜதந்திரமாக பார்க்கலாம்.

இது, அமெரிக்காவின் எதிரி நாடுகளுடனும், அண்டை நாடுகளுடனும் சீனா கடந்த காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைக ளுக்கு ஒரு பதிலடியாக அமைந்துள்ளதென வும் கூறலாம். ஆகவே, இனிவரும் காலத் தில், சீனாவை பலவீனமாக்கும் நடவடிக்கைகள் ஆசியப் பிராந்தியத்தில் கூர்மைய டைப் போகின்றன. ஆதலால், ஆசியாவி லுள்ள முக்கியமான சிக்கல்கள், இனக்குழு போராட்டங்கள், ஆயுதக் கிளர்ச்சிகள் எல்லாம் வல்லாதிக்க சக்திகளின் நலன்களுக்காக கருவியாக்கபபடக் கூடிய சாத்தியப்பாடு கள் அதிகரித்துள்ளது.

-நிர்மானுஷன் கட்டுரையிலிருந்து-

# வசைகள் இருக்கட்டும் — செயல் என்ன? —

நாம் அனைவரும் கூடுகுலைந்து காடு கலைந்து கொழு கொம்பு இன்றி அலைந்து தவிக்கும் நிலையில் உள்ளோம். இந்நிலையில் அதிகபட்ச ஒற்றுமையும், அதிகபட்ச அன்னியோன்னியமும் அவசியப்படுகிறது. அங்கவீன முற்றும், அடுத்த கட்ட வாழ்விற்கான வழி இன்றியும் உள்ள எமது மக்களைப்பற்றி அதிகம் நாம் சிந்திக்க வேண்டும். இன்னுயிர்களைப் பலிகொடுத்து ஆறுதல் இன்றித் தவிக்கும் அந்த மக்களுக்கு முதலில் நாம் ஆறுதலாகவும், நம்பிக்கை அளிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். அர்ப்பணிப்புடன் சாத்தியமான அடுத்த கட்டத்தைப் பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும். இப்போ எம்முன் எழும் முதலாவது கேள்வி அடுத்தது என்ன என்பதுதான் (What is next?)

கற்பனையில் மிதக்காமல், ஒருவரின் காலை ஒருவர் வாருவதில் கவனம் செலுத்தாமல் எம்முன் உள்ள நடைமுறைச் சாத்தியமான அடுத்த பணி என்ன என்பதை தெரிவு செய்து அதனை நிறைவேற்றப் பாடுபட வேண்டும். அவரவர் தன்தன் கொள்ளளவிற்கும், சக்திக்கும் ஏற்ப தமக்கான உடனடிப்பணியைத் தெரிவு செய்து அதனை நிறைவேற்ற வேண்டும்.

ஒவ்வொரு அமைப்பும் தன் அடுத்த கட்ட முதற்பணியை மக்கள முன் அறிவிக்க வேண்டும். தமது அடுத்தகட்டப் பணியை தெரிவு செய்து அதனை மக்கள் முன் வைத்து நேரடி நடவடிக்கைகள் மூலம் பணியாற்ற வேண்டும். அறிக்கை அரசியலுக்கு அப்பால் நேரடி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். வசைபாடும் அரசியற் கலாச் சாரத்தைக்கை விட்டு செயல்பூர்வ அரசியல் திட்டங்களை முன்வைத்துச் செயற்படுவதன் மூலம் செயலால் கூட்ட மைப்புக்கள் உருவாக முடியும். ஒருவரை யொருவர் அனுசரித்தும், அரவணைத்தும் போகத் தவறினால் அளவால் சிறிய இனத்தவராகிய நாம் அழிந்து படுவதைத் தவிர மிஞ்சப் போவது எதுவும் இல்லை.

ஒன்றுபட்டு செயற்படத் தவறுவோமானால் எமது பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும், அவர்கள் பின் நீளவல்ல எதிர்காலச் சந்ததியினருக்கும் நாம் தீங்கு இழைத்தவராவோம். இப்போது முதற்கட்டமாக குறைந்த பட்சம் வசைபாடுதலைக் கைவிட்டு, ஒருவருக்கு ஒருவர் குழிபறிப்பதைக் கைவிட்டு, நீண்டதூரப் பார்வையுடன் எம்முன் உள்ள முதற் பணியைத் தேர்ந்தெடுத்து நிறைவேற்றுவோம்.

நாம் நூறாவது படிக்கு போக வேண்டுமே ஆயினும், முதலாவது படியில் கால் வைக்க வேணடும். முதலாவது படியில் வலது காலைத் தூக்கி வைத்தால் இரணடாவது படியில் இடது காலைத்தூக்கி வைக்கலாம். இரண்டாவது படியில் ஏறினால் மூன்றாவது படி தயாராக நிற்கும். எனவே முதலாவது படியில் கால்வைத்தால் நாம் நூறாவது படிக்கும் ஏறமுடியும். அவ்வாறு முதலாவது படியில் கால் வைக்காமல் நூறாவது படியின் அழகைப் பற்றி வர்ணித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இப்போது எமது பணி எம்முன் உள்ள முதலாவது படியில் கால் வைப்பதே.

- சண்முகவடிவேல் கட்டுரையிலிருந்து -

# பொது இடங்களில் தமிழ் படும்பாடு




பொது இடங்களில் காணப்படும் அறிவிப்புகளிலும் விளம்பரங்களிலும் தமிழ்மொழி கையாளப்படும் விதம், மொழி விஷயத்தில் நமக்கிருக்கும் அலட்சியத்தின் ஆழத்தை உணர்த்துகிறது. 'காலனிகளை இங்கே அகற்றவும்' என்பது போன்ற எழுத்துப் பிழைகளுடன் கூடிய அறிவிப்புகள் மொழியின் மீது லேசாக உரசிச் செல்பவைதான். ஆனால் ஆங்கிலத்திற்கு ஈடாகத் தமிழில் வார்த்தைகளை உருவாக்கும் சில முயற்சிகள், எதிர்மாறான நகைப்பிற்குரிய பொருளை ஏற்படுத்தி, மொழியை மொண்ணையாக்கி விடக்கூடியவை.


உதாரணமாக, Free Left என்ற ஆங்கிலத் தொடருக்கான மொழிபெயர்ப்பாக 'இடதுபுறம் தன்னிச்சையாகத் திரும்பவும்' என்பதைக் காண நேர்ந்தது. வருஷக்கணக்கில் இந்த அறிவிப்பைப் பார்த்து, புரிந்துகொண்டு வாகனங்களை ஓட்டிச் செல்பவர்கள் தலை தப்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், அந்த இரண்டு தொடர்களுக்கு மிடையே பதுங்கியிருக்கும் பொருள் வேறுபாடு கண்டுணர்ந்து, களையப்பட வேண்டியது. Free என்ற வார்த்தை மேற்படி மொழிபெயர்ப்பாளரைப் பாடுபடுத்தியதன் வினைதான் இந்த அபத்தத்தில் முடிந்திருக்கிறது. 'இடதுபுறம் தடையின்றித்திரும்பவும்' என்று போடுவது இதற்கு எளிமையான மாற்று.

multi-theraphy 'centre என்பது 'கூட்டுச்சிகிச்சை மையம்' என்று ஒரு பெயர்ப்பலகையில் எழுதப்பட்டிருந்தது. இதிலுள்ள பொருள் மயக்கத்தைப் பொருட்படுத்தாமல், சரியோ தவறோ ஆங்கிலத்தொடருக்குப் பக்கத்தில் எழுதுவதற்கு ஒரு தமிழ்த் தொடர் கிடைத்தால் போதும் என்ற அலட்சியம்தான் இவற்றுக்குப் பின்னால் இருக்கிறது.

அரசாங்கத்தை விட தனியார் அமைப்புகளின் மொழிப் பிரயோகம் மொழிநலனில் அக்கறை கொண்டோரை நொந்துகொள்ள வைத்துவிடும். ஒரு மத அமைப்பு வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தின் தலைப்பு 'கவலைகளை மேற்கொள்வது எப்படி?' அதிர்ச்சியுடனும் குழப்பத்துடனும் அதைப் புரட்டிப்பார்த்தபோது "How to overcome worries?" என்பதைத்தான் மேற்கண்டவாறு மொழிபெயர்த்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது.

ஒரு இரு சக்கர வாகன விளம்பரத்தில் "Why settle for lesser brands?" என்பது 'பிறகு ஏன் குறைந்ததில் திருப்தி அடைய வேண்டும்?' என்று தமிழில் தரப்பட்டிருந்தது. மொழிபெயர்ப்பாளர்கள் தொடரின் பொருளைக் கருத்தில் கொள்ளாமல், அதன் வாக்கியக் கட்டமைப்பையும் வார்த்தைகளையும் மட்டும் கவனத்தில் வைத்துச் செயற்படுவதற்கு இது ஒரு உதாரணம். "It is better to be Mr. Late than to be late Mr. ....." என்பதை 'தாமதம் திருவாளராக இருப்பதைவிட திருவாளர் தாமதமாக இருப்பது மேல்' என்று மொழிபெயர்ப்பதற்கு இவர்கள் தயங்கமாட்டார்கள் என்று தோன்றுகிறது.


-ஆனந்த் செல்லையா-



# போதனையிலும் பார்க்க சாதனை பெரிது!

எல்லாச்சிறுவர்களுக்கும் எங்காவது கீற வேண்டும் என்ற ஆர்வம் இயல்பாகவே இருக்கும். சுவரில், பாடசாலைப்புத்தகத்தில், கையில் அகப்படும் எந்தக்கடதாசியிலும், கிடைப்பதைக் கொண்டு கிறுக்குவதை இன்றைய சிறுவர்களிலும் காணலாம்.

"எந்த குழந்தையும் நல்ல குழந்தையே மண்ணில் பிறக்கையிலே" என்பதற்கு இவை எல்லாம் சான்றாகும்.



வளரும் காலத்தில் சிறுவர்களுக்கு வீட்டில், பாடசாலையில் மற்றும் ஏனையவர்கள் கொடுக்கின்ற ஊக்கம் அவர்களை முழுமையாக்குகின்றது. அவர்களின் ஆற்றலை வெளிக்கொண்டுவர உதவுகிறது.

அணுவிஞ்ஞானிகளான அயன்ரீனும், அப்துல்கலாமும் கூட தங்கள் அனுபவங்களில் இருந்து சிறுவர்களை கையாள்வது பற்றியும் சித்திரம் மற்றும் புத்தாக்க முயற்சியில் ஈடுபடுவது பற்றியும் உரையாடக்கிடைத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் நிறையவே சொல்லி இருப்பதை அவதானிக்கலாம்.

அயன்ரின் கண்டுபிடிப்புக்கள் எல்லாம் பரிசோதனைக்கூடங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை அல்ல. எல்லாமே கற்பனையில் கண்டவைதான். பிற்காலத்தில் கற்பனையில் கண்டவை பரிசோதனைக் கூடங்களில் உறுதிப்படுத்தப்பட்டன.

புதிய சிந்திக்கும் ஆற்றல் புத்தாக்கத்திறன் வளர்ப்பதற்கு கற்பனை பண்ணுதல் முக்கியமானது. கற்பனை செய்யும் ஆற்றல் ஓவியர்களுக்கு இயல்பாகவே உள்ளது. சிறுவர்களை இனம்காண்பதற்கு, அவர்களின் மனவோட்டம் என்பவற்றை அடையாளம் காண சித்திரம், அவர்கள் பயன்படுத்தும் வர்ணம் என்பதை வைத்து முடிவுகள் எடுக்கும் பண்பு உள்ளது.

மேலே சொல்லப்பட்ட விடயங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள படித்தவர்கள், ஆசிரியர்கள் சில பெற்றோர்கள் அறிந்திருந்தாலும் கூட சித்திரத்தின் முக்கியத்துவம் உணர்ந்தும் கூட அவற்றை தமது பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்து நடைமுறைப்படுத்துவது குறைவு. திருநெல்வேலி குமாரசாமி வீதியில் உள்ள சிவகுருநாத பீடத்தில் 30 வருடங்களுக்கு முன்னர் எழுதிய வாசகம் ஒன்று உள்ளது அதில் போதனையிலும் சாதனை சிறந்தது என்று எழுதப்பட்டுள்ளது.

எங்களில் அநேகர் போதிப்பதற்கே ஆயத்தமாக உள்ளனர் போதிப்பதில் ஓரிரண்டைக் கூட தமது சொந்த வாழ்வில் செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனாலும் விதிவிலக்குகள் உண்டு. இயற்கை சிலருக்கு சில ஆற்றலைக் கொடுத்து இயக்கும் சூழலையும் கொடுக்கும்.

அந்த வகையில் தான் இணுவில் மத்திய கல்லூரி சித்திர ஆசிரியர் சின்னத்தம்பி யோகேஸ்வரியை நோக்கமுடியும். சித்திர ஆசிரியராக பணியாற்றத்தொடங்கிய காலத்தில் இருந்து ஒருவர் இருவர் என ஆரம்பித்து கடந்த 20 வருடகாலத்தில் நூற்றுக் கணக்கான மாணவர்களை சித்திரத்துறையில் ஈடுபடுத்தி வெற்றியாளர்களாக மாற்றியுள்ளார். தமது மாணவர்களுக்கு இந்த உலகை இரசிப்பதற்கு கற்றுக் கொடுத்துள்ளார் என்றும் கூட சொல்லாம்.

வெளிநாடுகளில் உள்ள சிறுவர்களை வளர்ப்படுத்துவதற்காக ஏராளமான சித்திரக்கழகங்கள் பாடசாலை தவிர்ந்த சமூக அமைப்புக்களாக (எங்களூர் சனசமூக நிலையம் போல) இயங்குகின்றன. அவை நிதிதிரட்டி தத்தமது சூழ்நிலையில் சித்திரத்துறையில் ஆர்வமுள்ள சிறுவர்களுக்கு உதவுதல், அவர்களிடையே போட்டிகள் வைத்து ஊக்குவித்தல், பயிற்சி வகுப்புக்கள் நடத்துதல் என பலவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலும் ஏராளமான உள்ளூர் அரசசார்பற்ற அமைபபுக்கள் இயங்குகின்றன. ஆனாலும இதுவரை ஏதாவது உருப்படியாக செய்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. வெளிநாட்டவர்களின் பணத்தில் இயங்குபவர்கள் எங்கள் குழந்தைகளின் எதிர்காலத்துக்காக பாடுபட வேண்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.



ஆனாலும் இணுவில் மத்திய கல்லூரியில் சித்திரக்கழகம் ஒன்றை ஆரம்பித்து அதற்காக இரவுபகலாக சிந்தித்திருக்கின்ற வளங்களோடு, வழமையான நிர்வாகம் மற்றும் தொழில்சார் சவால்களையும் எதிர்கொண்டு ஒரு பயனுள்ள பணி ஆற்றப்பட்டுள்ளது.

கடந்த 20 வருட காலத்தில் கோட்ட மட்டத்தில் ஆரம்பித்து சர்வதேச தரத்திலான சித்திரப்போட்டிகள் வரை 173 மாணவர்கள் 624 பரிசில்களையும், சான்றிதழ்களையும் வென்றுள்ளனர் இன்னும் பல மாணவர்கள் கல்லூரியின் புகழையும், ஆசிரியரின் புகழையும் தமது வெற்றிகளூடாக பரப்பிக்கொண்டு வருகின்றனர். ஒருவர் தான் ஏற்றுக்கொண்ட பணியை சிரத்தையுடன் அதற்காக உழைத்து, அவரை நம்பி வந்தவரை சரியான வழியில் வழிநடத்துவது என்பது எல்லோராலும் செய்யக்கூடிய செயல் அல்ல என்பது தமிழர்களின் வரலாறு நன்கு உணர்த்தும். உண்மையான உழைப்பிற்கு சூழ் நிலைகள் விரோதமாக உள்ளபோது எதிர்ப்புக்கள், பொறாமைகள், திட்டமிட்டுக் குழப்புதல் போன்ற பல்வேறு இடையூறுகளையும் வெற்றி கொள்வதற்குரிய பலம், இயற்கையால் மட்டுமே எமக்கு அளிக்க முடியும்.

-குரு-

# கலையின் வேலை

இரண்டு படைப்புகளை எடுத்துக் கொண்டு ஒன்று ஏன் கலையாக இருக்கிறது பிறிதொன்று ஏன் ஆகவில்லை என்று விளக்க முற்படுவதைப்போல சிரமமான காரியம் இலக்கியத்தில் வேறு இல்லை.

கலை இலக்கியம் பெரும்பாலும் மனம் சார்ந்தவை என்பதால் எனக்குப் பிடித்திருக்கிறதே என் உணர்வைத் தட்டி எழுப்பிற்றே உன்னை ஒன்றும் செய்யவில்லை என்பதால் இதைக் கலையில்லை என்று சொல்ல முடியுமா? உங்கள் உழக்கால் இதை அளக்கமுடியாததால் கோடிப் பேரைக் கவர்ந்த இதனை எப்படிக் கலையில்லை என்று கூற முடியும என்று கச்சை கட்டிக் கொண்டு களத்தில் இறங்கிவிடு வார்கள்.

எழுதியவனே இறங்கி விளக்க முற்பட்டால், ஊரையெல்லாம் நொட்டை சொன்னாயே உன்னை விமர்சித்தால் தாங்க முடியவில்லையா என்கிற கேள்வி எழும்.

எவனைப் பார்த்து நொட்டை சொல்லப்பட்டதோ அவன் தனது படைப்பாளிப் பதவிசைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டி பதிலளிக்காது இருக்கிறான் என்பதால் எவனுமே பதில் சொல்லக் கூடாது என்பது எந்த ஊர் இலக்கிய சட்டம்? பதிலளிக்க முனைந்தால் உள்ளதும் போய் பப்பரப்பே என்றாகிவிடும் என்கிற சாதாரணத் தற்காப்பைப் போய், ஏதோ சட்டையே செய்யாத புறக்கணிப்பாய்க் கொண்டாடுகிற கோமாளித்தனத்தை என்னவென்று சொல்வது?

தர்க்கரீதியாக தம் தகிடுதித் தங்கள் அம்பலப்படுவதை ஏற்க முடியாத்வர்களுக்குக் கிடைத்த நொண்டிச்சாக்குதான் விமர்சனத்திற்கு படைப்பாளி பதிலளிக்கக் கூடாது என்கிற பாவ்லா.

கலை இலக்கியத்தின் தலையாயக் கடமையே அறம் செய்ய விரும்பு ஆறுவது சினம் என்கிற வாய்பாடாய், வளர்ந்த சிறார்களுக்கு போதிப்பதுதான் என்பது போல் படைப்பாளிக்குப் பாடம் எடுக்க வந்துவிடுவார்கள் இணையத்துப் பேராசான்கள்.

பள்ளியில் கற்ற 'ஒழுங்கை' கற்பிதம் எனக் கலைத்துக் கொண்டால்தான் வாழ்க்கையில் எப்படி 'ஒழுங்காக' முன்னேற முடிகிறது என்கிற யதார்த்த அமிலத்தைப் போகிற போக்கில், முகமூடியைப் பொசுக்கி நம் முகத்தில் வீசிச்செல்வதல்லவா இலக்கியம்?

தி.ஜானகிராமனிடம் இருக்கும் மனித மனங்களுக்கிடையிலான மோதலின் தீவிரமும் பாலகுமாரனின் அதீத ஆவேசப் போலிக் கூச்சலும் ஒன்றா? வாழ்வின் நிகழ்வுகளை உண்மைக்கு நெருககமாய் இருந்தபடி சுவாரசியமாய் சொல்வதற்கும் சுவாரசியத்திற்காக பொய்யை பூதாகரமாக்கித் திணிப்பதற்கும் வித்தியாசம் இல்லையா?

Fritz Lang and Alfred Hitchcock இருவரையும் போலவே CLAUDE CHABROL எடுத்த படங்களும் த்ரில்லர் வகையை சார்ந்தவையே. அவை வெறும் த்ரில்லர்கள் மட்டுமேவா, ஏன் அவை கலையின் சிறந்த வெளிப்பாடுகளாய்க் கொண்டாடப்படுகின்றன என்பதைப் பார்த்துதான் படித்துக்கொள்ள முடியும். கூடவே எது கலை ஏன் பிறிதொன்று கலை இல்லை என்பதும் பிடிபடக்கூடும்.

கலையின் வேலை காலட்சேப போதனையல்ல, அனுபவம்.

- விமலாதித்த மாமல்லன -

# தொழில்நுட்பம் தரும் தொல்லைகளை ஏற்றல்

கூகிள், பேஸ்புக் போன்றவை தத்தம் தளங்களில் உள்ள "ஏற்கத்தகாத விஷயங்களை" (Objectionable materials) நீக்குவதற்கு ஒரு முறையை ஏற்படுத்தாவிட்டால், சீனாவில் நடப்பதைப் போல அவர்களுடைய தளங்கள் தடை செய்யப்படும் என்று டில்லி உயர்நீதிமன்றத்தில் இப்போது நடந்துகொண்டிருக்கும் வழக்கு ஒன்றில் நீதிபதி கருத்து தெரிவித்துள்ளார்.

நீதிபதிக்கு தொழில்நுட்பம் பற்றிய புரிதல் இல்லை என்று நினைக்கிறேன். கூடவே, கூகிள், .'.பேஸ்புக் இன்னபிற சோஷியல் தளங்கள் பற்றிய புரிதலும் குறைவாக உள்ளது என்றே கருத வாய்ப்புள்ளது. அவர் எதிர்பார்ப்பதைச் செய்வது என்பது தொழில்நுட்ப ரீதியில் மிகக் கடினமானது. சொல்லப்போனால் செய்யவே முடியாத ஒன்று.

இப்போது நம் நாட்டில் அரசியல்வாதிகளும் சில ஒழுக்கவாதிகளும் என்ன எதிர்பார்க்கிறார்கள்? மேலே உள்ளதில் இரண்டு விஷயங்களைத் தான். ஒன்று, பாலுணர்வைத் தூண்டும் விஷயங்களைத் தடைசெய்வது குறித்து. இரண்டாவது பிறரை வசைபாடுதல், அவதூறு செய்தல் ஆகியவற்றைத் தடை செய்வது குறித்து. இவை இரண்டைப் பற்றியுமே எனக்கு மாற்றுக் கருத்துகள் உள்ளன.

1. பாலுணர்வைத் தூண்டக்கூடிய விஷயங்கள், மனிதர்களுக்கு அவசியமான ஒன்று என்று நினைக்கிறேன். அதற்கான வசதிகள், வாய்ப்புகள் அனைவருக்கும் சட்டபூர்வமாகவே தரப்படவேண்டும். 'அனைவருக்கும்' என்றால் சிலரையும் சிலவற்றையும் தவிர்த்து. உதாரணமாக, 18 வயது நிரம்பாதோருக்கு இவை சென்று சேரக்கூடாது.


இங்கே, இந்த விஷயங்கள் 18 வயதுக்குக் கீழே உள்ளவர்களை எப்படிச் சென்று சேராமல் இருக்கவேண்டும் என்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தேவை. இதை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நுட்பச் சிக்கல்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இது தனியாகப் பேசவேண்டிய விஷயம்.

2. வசை, அவதூறு. இதில் முதலாவது முழுமையாகவே அனுமதிக்கப்படவேண்டும் என்ற கருத்தை வந்தடைந்துள்ளேன். எனவேதான் நான் வினவை, அதன் வசவை ஆதரிக்கிறேன். வகைதொகையின்றி, என்னையும் சேர்த்து, வசை பாடுவதில் அவர்கள் வல்லவர்கள். வசையை ஏற்பது, மறுப்பது, கொதித்துக் களத்தில் இறங்குவது, கத்திச சண்டை போட்டு ஒருவர் உயிரை விடுவது என்பதெலலாம் பழங்காலம். பெரும்பாலும் வசை என்பது பாலுறுப்புகளில் தொடங்கி, உறவுமுறையினரை இழுத்து, ஒருவர் செய்யும் வேலையை, ஒருவர் புனிதமாகக் கருதுவனவற்றை எல்லாம் இழுத்து அசிங்கப்படுத்துவது. அடுத்து, ஒருவர் தான் எது இல்லை என்று சொல்கிறாரோ அதுதான் அவர் என்று சித்தரிப்பது.

வசை ஒரு கட்டத்தில் அவதூறாகிறது. எப்போது என்றால், அதனால் அவரது புகழுக்கும், கௌரவத்துக்கும், அவரது வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் குறை ஏற்படும்போது. அப்போது சட்டரீதியான நடைமுறை அவசியமாகிறது. குறைந்தபட்சம் அதன்மூலம் பிறரை நம்பவைப்பதற்காவது.

இந்தியாவில் அவதூறை எதிர்கொள்ளக்கூடிய வழக்காடுமன்றச் செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்ததில்லை. எனவே மான நஷ்ட வழக்கு போன்றவை நீங்கள் முதல்வர் ஜெயலலிதாவாக இருந்தால் மட்டுமே செல்லுபடியாகும்.

வேண்டுமானால், இந்த இடத்தில் சட்டம் கொஞ்சம் கடினமாக ஆவது நல்லது. அவதூறு என்று நிரூபிக்கப்பட்டால், அதனால் அவதூறு செய்தவர



தண்டனையாக அடையவேண்டிய பொருளாதார நஷ்டம் கடுமையானதாக இருக்கவேண்டும். இங்கும், அவதூறு என்பது உயர்தரத்தில் நிரூபிக்கப்பட வேண்டும். வசையா, அவதூறா, மனம் நோக வேண்டும் என்பதற்காக மட்டும் செய்யப்பட்டதா அல்லது எதிராளியின் புகழ் பாதிக்கப்பட்டு அவர் பணரீதியாக நஷ்டம் அடையவேண்டும் என்ற உள் நோககத்துடன் செய்யப்பட்டதா என்று கவனமாகப் பிரித்துப் பார்க்கவேண்டும்.

இப்போது மீண்டும் பிரச்சினைக்கு வருவோம். இணைய நிறுவனங்கள் இதற்காக தொழில்நுட் ணபத்தைக் கிண்டி எதையாவது செய்தாக வேண்டுமா?

என் கணிப்பில், தேவை இல்லை. இது தொழில்நுட்பம் உருவாக்கிய ஒரு பிரச்சினை இல்லை. எனவே தொழில்நுட்பம் இதைத் தீர்க்கவேண்டாம். திட்டுவது மனிதர்தான். மனிதர்கள் ஒருவரை ஒருவர் வசைபாட நிறையக் காரணங்கள் உள்ளன. அவர்களுக்கு இணையம் ஒரு கருவி. இணையத்தில் திட்டக் கூடாது என்று சட்டம் இருந்தால் போஸ்டர் அடித்து ஒட்டுவார்கள். செலவு கொஞ்சம் அதிகமாகும். இங்கே இணையம் செலவைக் குறைக்கிறது. எளிதாகப் பரவ வழிவகை செய்கிறது. ஆனால் ஆதாரமான வசை/அவதூறு மனநிலையை அது உருவாக்குவதில்லை. எனவே பழியை இணையத்தின்மீது போடுவதில் நியாயம் இல்லை.

இணையத்தில் செய்தாலும் வேறு எங்கு செய்தாலும் அவதூறு அவதூறுதான். அதனை சம்பந்தப்பட்ட நபர்கள் சட்டரீதியாகத்தான் தீர்த்துக்கொள்ள முடியும். அதுவும் இந்தியா போன்ற நாடுகளில் அதற்கு ஒரு மாமாங்கம் ஆகிவிடும்.

ஆனால் இதனைத் தாண்டி இன்னொரு பிரச்சினை இருக்கிறது. அதுதான் அநாமதேயம். மெய் உலகில் அவதூறு செய்தவரைக் கண்டுபிடித்து அவர்மீது நடவடிக்க எடுக்க முயற்சி செய்யமுடியும் ஆனால் இணையத்தில் அநாமதேயங்கள் அவதூறைப் பரப்பி, பரவவிட்டு, காணாமல் போய்விடுவார்கள். இதுதான் அரசியல்வாதிகளுக்கும் பிரபலங்களுக்கும் கடும் எரிச்சலை ஏற்படுத்துகிறது.

ஆனால், மாறிவரும் உலகில் இதனையும் நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் என நினைக்கிறேன். ஒருவர் நம்மை அவதூறு செய்வதால் ஏற்படும் பண நஷ்டங்களையும்கூட நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். இன்று மோசமான அரசு பதவியில் இருப்பதன் காரணமாக நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் பண நஷ்டம் ஏற்படுகிறதல்லவா? அதனை ஏற்றுக் கொள்கிறோம் அல்லவா? அதேபோல, இணையம் தரும் வசதிகளை அனுபவிக்கும் நாம், அவதூறு காரணமாக நம்மில் சிலருக்கு ஏற்படும் தொல்லைகளையும் ஏற்கவேண்டியிருக்கும்.

-பத்ரி சேஷாத்ரி-


# அரச அலுவலகத்தில் தீ

(சென்னை)



மெரீனா கடற்கரைக்கு முன்பாக உள்ள அரசு அலுவலகம் இயங்கும் எழிலகத்தில் தீ விபத்து. ஏற்பட்டுள்ளது. இதன் போது தீயணைப்பில் ஈடுபட்ட வீரர் ஒருவர் பலியானார். விபத்தில் அலுவலகத்தில் இருந்த முக்கிய ஆவணங்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாயின.

இங்கு ஏற்பட்ட தீ விபத்துக்கான காரணம் இதுவரை எதுவும் அறியப்படவில்லை. தீ விபத்தில் சதிச்செயல் இருக்கும் என சந்தேகிக்கப்படுகிறது. வேகமாகவும் பரவிய தீயை அணைக்க 15 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஈடுபட்டன.




கட்டடத்திற்குள் நுழைந்து தீயை அணைக்கும் பணியில் இருந்த தீயைணைப்பு வீரர் அன்பழகன் மேற்கூரை இடிந்து விழுந்ததில் பலியானார்.

பொங்கல் திருநாளை முன்னிட்டு அரசு அலுவலகத்திற்கு தொடர் விடுமுறை என்பதால் சென்னையில் உள்ள அனைத்து தலைமை அலுவலகங்களும் வெறிச்சோடி காணப்பட்டன.

இரவில் தங்கியிருந்து பணியாற்றும் ஊழியர்கள் கூட யாரும் இல்லை. இந்நேரத்தில் நள்ளிரவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது குறித்துப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியாவின் முதலாவது புகைப்படப் பத்திரிகையாளர்

(வடோதரா)



இந்தியாவின் முதல் பெண் புகைப்பட பத்திரிகையாளரான ஹோமாய் வ்யாரவாலா தனியார் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் காலமானார்.

அவர் இறக்கும் போது வயது 98.ஹோமாய் 1913 டிசம்பர் 9 இல் பிறந்தார். பார்சி குடும்பத்தைச் சேர்ந்த இவர் மும்பையில் வளர்ந்தார். 1942 இல் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளைப் படம்பிடித்த இவர், பிரிட்டிஷ் தகவல் சேவையில் பணியாற்றினார்.

ஜூன் 3 இல் இந்தியப் பிரிவினை குறித்து நடந்த வாக்கெடுப்பு, 1947 ஒகஸ்ட் 15 ஆம் திகதி சுதந்திர இந்தியாவின் முதல் கொடியேற்று வைபவம், மௌண்ட் பேட்டன் பிரபு விடைபெறும் நிகழ்வு, மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி ஆகியோரின் இறுதிச் சடங்கு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை தத்ரூபமாகப் படம்பிடித்தவர் இவர். இவருக்கு பத்ம விபூஷன் விருது கடந்த ஜனவரியில் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழர் வாழ்வுரிமைக் கட்சி உதயம்

(சென்னை)



பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் எம்.எல்.ஏ. வேல்முருகன் சென்னையில் புதிய கட்சியை ஆரம்பித்தார். தனது கட்சிக்கு தமிழர் வாழ்வுரிமை கட்சி என பெயர் சூட்டியுள்ள வேல் முருகன், கட்சிக் கொடியினை அறிமுகப்படுத்தியுள்ளார்.

மேலும் புதிய கட்சி தொடங்கியது பற்றி அவர் தெரிவிக்கையில்,

நாங்கள் யாருக்கும் எதிரானவர்கள் அல்ல என்றும் யாருடனும் கூட்டணி வைப்போம் என்றும் காலத்திற்கேற்ப இந்திய அரசியல் சட்டத்திலும் மாற்றம் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# தந்தையிடமிருந்து பிரிந்து மகன் தனிக்கட்சி



(திருவனந்தபுரம்)

கேரள காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, கேரள வனத்துறை அமைச்சர் கணேஷ்குமார் பதவியை ராஜினாமா செய்ய தயார் என அறிவித்தார்.

ஆனால், முதல்வர் உம்மன் சாண்டி தலையிட்டு, அவரை ராஜினாமா செய்யவேண்டாம் என கேட்டுக்கொண்டார். இருப்பினும், புதிய அரசியல் கட்சியை கணேஷ்குமார், விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கேரளாவில் ஆளும் ஐக்கிய ஜனநாயக கூட்டணியில், கேரள காங்கிரஸ் கட்சியும் இடம் பெற்றுள்ளது.

கட்சியின் நிறுவன தலைவராக் முன்னாள் அமைச்சர் ஆர். பாலகிருஷ்ண பிள்ளை இருக்கிறார். அவரது மகன் கணேஷ்குமார் வனத்துறை அமைச்சராகவும், கட்சியின் துணை தலைவராகவும் பதவி வகிக்கிறார்.

இக்கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டம் திருவனந்தபுரத்தில் நடந்தது. கூட்டத்திற்கு கட்சித் தலைவர் பாலகிருஷ்ண பிள்ளை தலைமை தாங்கினார்.

கட்சியையோ, தலைமையிடமோ ஆலோசிக்காமல் அமைச்சர் தன் இஷ்டத்துக்கு முடிவுகளை எடுத்து வருகிறார் என தனது மகனும், அமைச்சருமான கணேஷ்குமாரை கடுமையாக விமர்சித்தார். தொடர்ந்து, துணைத் தலைவர் பதவியில் இருந்து கணேஷ்குமார் நீக்கப்பட்டார்.

# இந்தியாவில் மோசமான ஆட்சி காங்கிரஸ் மீது அத்வானி சீற்றம்


(சென்னை)

சுதந்திரத்தின் பின்னர், இவ்வளவு மோசமான அரசை இதுவரை கண்டதில்லை, என, மத்திய அரசு மீது, பா.ஜ., மூத்த தலைவர் அத்வானி கடும் விமர்சனம் செய்துள்ளார்.

சென்னையில் அவர் மேலும் தெரிவித்ததாவது, தற்போதைய மத்திய அரசு, மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிப்பதில் தான் முனைப்பாக இருக்கிறது. நாடாளுமன்றில், மூன்றில் இரண்டு பங்கு பலமிருந்தால் கூட மாற்றப்பட முடியாத ஒரே விஷயம், கூட்டாட்சி தத்துவம். இந்திய அரசியல் சாசனத்தில், அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், மத்திய அரசின் செயற்பாடுகள் கூட்டாட்சித் தத்துவத்தையே கேலிக்கூத்தாக்கும் வகையில் இருக்கின்றன. சுதந்திரம் பெற்றதில் இருந்து, தொடர்ந்து 40, 45 ஆண்டுகளுக்கு மத்தியிலும், பெரும்பாலான மாநிலங்களிலும் காங்கிரஸ் அரசு தான் இருந்தது.

மத்திய, மாநில அரசுகளை எந்தக் கேள்வியும் கேட்க முடியாத நிலை. அதனால் தான், கூட்டாட்சித் தத்துவம் பலவீனமடைந்தது. பதவியில்



இருப்பவர் மன்மோகன். ஆனால், அதிகாரம் அத்தனையும் சோனியாவின் கையில். நல்லரசு இருக்க வேண்டுமானால், ஊழல இருக்கக் கூடாது.

நல்லரசும், ஊழலும் ஒருசேர இருக்க முடியாது. இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். ஜனநாயகமும், வாரிசு அரசியலும் ஒருசேர இருக்க முடியாது. மத்தியில் தற்போது நல்லரசும், ஜனநாயகமும் இருக்கிறதா என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன் என அத்வானி தெரிவித்தார்.

# காளையடக்கினர் வீரர்கள்



(மதுரை)

தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையின் இரண்டாவது நாளான நேற்று மாட்டுப் பொங்கல் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதனையடுத்து தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு ஆரம்பமானது. முதலாக, மதுரை மாவட்டம் பாலமேட்டில் ஜல்லிக்கட்டு தொடங்கியது.

ஜல்லிக்கட்டில் மொத்தம் 600 காளைகளை அடக்க 500 காளையடக்கும் வீரர்கள் பங்கேற்றுள்ளனர். முதலாவதாக நஞ்சமலை கோயில் காளை ஜல்லிக்கட்டில் களமிறக்கப்பட்டது.

உச்சநீதிமன்ற நிபந்தனைகளின்படி ஜல்லிக்கட்டு போட்டிக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மதுரை ஆட்சியர், மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் முன்னிலையில் போட்டி நடைபெற்று வருகிறது.

மேலும், ஜல்லிக்கட்டு கண்காணிப்புப் பணியில் சுமார் 1,500 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர். போட்டியின் போது அடிபடும் வீரர்களை மருத்துவமனை எடுதது செல்ல 108 அம்புலன்ஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடடன.

# சுப்பிரமணிய சுவாமி கைது செய்யப்படலாம்

(டில்லி)



சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலான கட்டுரையை எழுதியதற்காக சுப்பிரமணியம் சுவாமியை பொலிஸார் விசாரிக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் இதழில் கட்டுரை எழுதியதாக கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் சுவாமிக்கு எதிராக டில்லி பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

பயங்கரவாதம் குறித்து சுவாமி எழுதிய அந்தக் கட்டுரையில், இந்தியாவில் இந்துக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக பதிலடி கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். மேலும், இந்துக்களாகிய நம் அனைவருக்கும் இஸ்லாமிய பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் ஒன்றுபட்ட மனநிலை உருவாக வேண்டும்.

இஸ்லாமியர் ஒருவர் தனது இந்து பாரம்பரியத்தை உணர்ந்துகொண்டு இந்துஸ்தானத்தில் பரந்த இந்து சமூகத்தில் தாங்களும் ஓர் அங்கம் என அவர்களின் இந்து மரபை வெளிப்படுத்தினால் அவர்களை நாம் அரவணைத்து ஏற்கவேண்டும். மற்றவர்கள், இந்தியக் குடிமக்களாக பதிவு செய்யப்பட்டு குடியுரிமை பெற்றிருந்தாலும், வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றி தாங்கள் வெளிநாட்டு சிந்தனையுடன்தான் இருப்போம் என்றால், அவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கக் கூடாது என சுப்பிரமணியம் சுவாமி தனது கட்டுரையில் எழுதியிருந்தார்.

# வீரர்களை உருவாக்கிய கோவில் காளை

(மதுரை)

விளையாட்டில், கல்வியில் பயிற்சி அளித்தவர்களை மறக்கும் இக்காலத்தில், ஒரு காளை மாட்டின் மீது பத்தி செலுத்துகின்றனர் மதுரை வெள்ளையம்பட்டி இளைஞர்கள். இதுபற்றி தெரியவருவதாவது, அவ்வூர் இளைஞர்கள் காளை அடக்குவதற்காக முத்தாலம்மன் கோயில் காளையில் பயிற்சி எடுப்பர். தினமும் காலை, மாலை இளைஞர்கள் அழைத்துச் செல்லும் இடங்களுக்கு செல்லும் காளை, அங்கு ஜல்லிக்கட்டில் எப்படி காளைகளைப் பிடிக்க வேண்டும் என அவர்களுக்கு தன்னையே உதாரணமாக வைத்து களப் பயிற்சி அளிக்கும். கடந்தாண்டு திடீரென்று இறந்து. அதற்கு விழா எடுத்து, கோயில் எதிரே அதனைப் புதைத்தனர். இந்த இடத்தில் செருப்புகளை கழற்றி வைத்துவிட்டு தினமும் கும்பிட தவறுவதில்லை அவ்வூர் இளைஞர்கள்.

இந்த காளையிடம் பயிற்சி பெற்று, ஜல்லிக்கட்டில் தொடர் வெற்றிகளை குவிக்கும் வினோத் என்பவர் ஏழு வருஷமா மாடு பிடிக்கிறேன். கோயில் காளை தந்த பயிற்சியினால் இதுவரை வெற்றிகளையே குவிச்சுட்டு வர்றோம். நாங்க வாங்கி வரும் பரிசுப் பொருட்களை கிராம நிர்வாகத்திடம் கொடுத்துடுவோம்.



அதுக்கு பதிலா எங்களுக்கு ரூபா 2000 வரை பரிசு தந்து கவுரவிப்பாங்க. எங்க ஊரு மாடுபிடி வீரர்களிடம் பிரபலமாவதற்கு காரணம் இந்த கோயில் காளைதான். இதனாலேயே அதன் இறப்பை எங்களால் தாங்கிக்க முடியலை எனத் தொவித்தார்.


# மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஈரான் எச்சரிக்கை

உலகச் செய்திகள்



ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தடை விதித்துள்ளது. இதே வேளை மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் அளவை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் சர்வதேச நாடுகள் முனைப்பு காட்டிவருகின்றன. இந்த நிலையில் மேற்குலக நாடுகளுக்கான எண்ணெய் விநியோகத்தை வளைகுடா நாடுகள் அதிகரிக்கக்கூடாது என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது. எண்ணெய் விநியோகம் அதிகரிக்கப்படும் பட்சத்தில், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு வளைகுடா நாடுகளே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் ஈரான் தெரிவித்துள்ளது. அத்துடன் வளைகுடா நாடுகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என ஈரான் எச்சரித்துள்ளது

# கவிழ்ந்த கப்பலில் 10 தமிழர்கள்!



இத்தாலியின் மேற்குக் கடற்பிராந்தியத்தில் கவிழ்ந்த கொஸ்டா குரோசியர் கப்பலில் 10 தமிழர்கள் சிக்கியதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. விபத்துக்குள்ளானதில் ஐந்துபேர் உயிரிழந்ததுடன் 15 பெர் காணாமல் போயுள்ளனர். 3000பயணிகள்மற்றம் ஆயிரம் பணியாளர்களுடன் சென்ற அந்த சொகுசு கப்பலில் ஒட்டுமொத்தமாக 100 இந்தியர்கள் பணியாற்றுவதாகவும் தெரியவருகிறது. விபத்தில் காணாமல் போனவர்களை மீட்பதற்காக தொடர்ந்தும் மீட்புப் பணியாளர்கள் செயற்பட்டுவருகின்றனர். 3000 பேரும் மீட்கப்பட்டதாக இத்தாலிய பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. விபத்துக்கு மாலுமியின் தவறே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கப்பல் தரைதட்டியதால் இந்த விபத்து இடம்பெற்றதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர். உரிய முறைகளை பின்பற்றாமல் குறித்த பகுதிக்கு மாலுமி, கப்பலை செலுத்திச் சென்றதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் இந்தக் குற்றச் சாட்டுக்களை அவர் நிராகரித்துள்ளார். விபத்துக்குக் காரணம் என்று சந்தேகிக்கப்படும் கப்பலின் மாலுமி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## மக்கள் போராட்டத்திற்கு ஒரு வருடம் பூர்த்தி

ரியூனீசியாவை ஆட்சி செய்த ஜனாதிபதியினை அகற்றி ஒரு வருடம் நிறைவடைந்த நிலையில், அதனை ரியூனீசிய மக்கள் கடந்த 14ஆம் திகதி கொண்டாடினர். ரியூனீசியாவில் ஏற்பட்ட மக்கள் போராட்டம் வெற்றியளித்ததனை அடுத்து, வட ஆபிரிக்க மற்றும் அரபு நாடுகள் பலவற்றில் மக்கள் போராட்டங்கள் இடம்பெற்றன. சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் ரியூனீசியர்களால் மேற்கொள்ளப்பட்ட நடத்தப்பட்ட போராட்டம்தான், ஏனைய நாட்டு மக்களுக்கு உந்து சக்தியாக அமைந்ததாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு வருடம் நிறைவடைந்த போதிலும், மாற்றங்களின் வேகம் போதாது என தெரியவருகின்றது. வேலையில்லாப் பிரச்சினை அதிகமாக இருப்பதாகவும், பல சிக்கலான பிரச்சினைகள் மேலும் காலதாமதம் இன்றி தீர்த்து வைக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் வேண்டியுள்ளனர்.

## சோமாலியாவில் தொடரும் பஞ்சம்



சோமாலியாவில் தொடரும் பஞ்சத்தால் ஆயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஆபிரிக்காவின் சில பகுதிகளில் நீண்ட நாட்களாக ஏற்பட்டுள்ள பட்டினியால் 10,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகளால் சோமாலியா கடும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. உலகில் போசாக்கின்மையால் சோமாலியா மோசமாக பாதிப்படைந்துள்ளது.

சிறுவர்களின் எண்ணிக்கையில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் மந்தபோசனையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மில்லியன் கணக்கான மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிரியாவில் போராட்டக்காரர்களுக்கு பகிரங்க மன்னிப்பு



சிரியாவில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின்போது குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு பகிரங்க மன்னிப்பு வழங்குவதாக ஜனாதிபதி பஷார் அல் அஷ்ஷார்ட் தெரிவித்துள்ளார். கடந்த 10 மாதங்களாக சிரியாவில் அரசியல் போராட்டங்கள் வலுப்பெற்றுவருகின்றன. இதுவரையில் 14 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கின்றது. இதேவேளை வன்முறைகளைக் கட்டுப்படுத்த அந்த நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. மக்கள் கொல்லப்படுகின்றமை நிறுத்தப்பட வேண்டும் என சிரிய ஜனாதிபதி பஷார் அல் அஷ்ஷார்ட்டிடம், ஐநா செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார். இந்த நிலைலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## வெளியுறவுத்துறை அமைச்சர் பதவி ஏற்பார்?

நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மியான்மர் எதிர்க்கட்சித் தலைவரும், நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சான் சூகிக்கு அரசில் பதவி வழங்கப்படும் என அந்நாட்டு அரசு கூறியிருந்தது. இது பற்றி சூகி கூறுகையில், பதவியை நான் மறுக்கவில்லை. அதேநேரத்தில் பதவியை ஏற்றுக்கொள்வது என்பது அப்போது நிலவும் சூழல் மற்றும் என்ன அமைச்சர் பதவி என்பதை பொறுத்தது எனத தெரிவித்தார். மேலும் அவரிடம், வெளியுறவுத் துறை அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வீர்களா என கேட்டதற்கு, பலமாக சிரித்த சூகி, இதுபற்றி தீவிரமாக ஆலோசனைநடத்துவேன் எனத் தெரிவித்தார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

யதார்த்த கதைகள் வாசகனுக்கு கதை உலகினைத் தருவதற்குப் பதிலாக ஏற்கனவே வைக்கப்பட்ட கண்ணாடி ஒன்றினை முகம் பார்க்கத் தருகிறது. எனவே யதார்த்தவாத எழுத்தில் மொழியோ, வடிவமோ முதன்மையிழந்து அது வாசகனை ஒற்றைத் தன்மையில் சென்று அடைகிறது.

**– ஜோர்ஜ் லூயி போர்ஷே**

யதார்த்தக் கதைகள் பெரிதும் நேர்கோட்டு கதைத்தனமும், வார்க்கப்பட்ட கதாபாத்திரங்களும், ஒற்றை சாத்திய நிகழ்வும் கொண்டவை. இதில் எழுத்தாளன் கதாபாத்திரங்களை உருவாக்குவதே தனது முதல் வேலையாக நினைக்கிறான். இதற்கு எடுத்துக்கொள்ளும் பிரயத்தனம் கதா தளத்தின் மீதும் செயற்படாததால், மெலிந்த உருவங்கள் உரத்த குரலில் சமூக, அரசியல், தனிநபர் வாத பிரதிவாதங்களை முன்வைக்கும் கதைகளாக இவை முடிவு பெற்று விடுகின்றன. மேலும், வாசகனுக்கு இவை செய்துவைக்கப்பட்ட உலகை மட்டுமே தருகின்றன. புதிய கதையானது இவற்றை விலக்கி நிகழ்வின் சாத்தியங்களை பல்முனைகளிலும் எழுத முற்படுகின்றது. அதனால் இதன் வடிவமும் எழுத்துமுறையும் தன்னளவிலே யதார்த்தம் மீறிய உருவமாக வெளிப்படுகின்றது.

**– எஸ். ராமகிருஷ்ணன்**

எதார்த்தவாதத்தின் தவறு என்னவெனில், அது உண்மையை படைப்பு அப்படியே பிரதிபலிக்கிறது என்ற தோற்றத்தைக் கொடுப்பதே. ஓர் விஷயத்தை மொழியில் சொல்லுதல் என்பதே ஒருவகை சிதைவை மேற்கொள்கிறோம் என்றுதான் அர்த்தம். அறிதலே முழுமையாய் இல்லாதபோது வெளிப்படுதல் எப்படி முழுமையாகும்?

**– ழான் பவுல் சார்த்தர்**

நம்மைச் சுற்றியுள்ள நிகழ்வுகள் அனைத்தையும் நாம் தொன்மங்கள், புராணங்கள், தேவதைக் கதைகள், வரலாறுகள் என்று எத்தனை எத்தனையோ புனைவுகளின் வழியகவே விளங்கிக் கொள்கிறோம். ஆனால் இந்தப் புனைவுகளைப் பற்றிய உணர்வு இல்லாமல் எல்லாவற்றையும் முழுமையாகவும் சார்பின்றியும் புரிந்துகொண்டதாக நம்புவதும், அவற்றைப் பிரதிபலித்துவிட்டதாக எண்ணுவதுமே எதார்த்தவாதத்தின் அடிப்படை. எனினும் கடந்த சில பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள பல மாற்றங்கள் இப்புனைவுகள் பற்றிய ஒரு தன்னுணர்வை மனிதனுக்கு ஏற்படுத்தியுள்ளன. எதார்த்தம், உண்மை என்பனவெல்லாம் எத்தனை போலியானவை என்பதை அன்றாட நிகழ்வுகள் அவனுக்குத் திரும்பத் திரும்ப உணர்த்துகின்றன. எந்த எதார்த்தவாதப் படைப்பும் ‘உண்மையை அப்படியே பிரதிபலித்து விடுவதில்லை. எல்லாமே சில தேர்வுகள், வரிசைப்படுத்தல்கள் என்கிற அடிப்படையில் புதிய எதார்த்தத்தைக் கட்டமைக்கவே செய்கின்றன என்பதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படத் தொடங்கியுள்ளன.

**– அ.மார்க்ஸ்**

இழப்பதற்குத் தன்னைத் தவிர ஏதுமற்றவனாய் இயற்கையின் முன் நின்றவனும், தனது உயிர்ச்சிதை அச்சத்தின் காரணமாகவே குழுவாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவனுமான மனிதன், தான் எதிர்கொள்ளும் பொருட்களைப் பற்றிய அறியாமை என்பது தனது இருப்பையே அச்சுறுத்துவதாக அமைவதால் பொருட்களுக்குப் பெயரிடுவதன் மூலம் அவற்றைத் தனது கட்டுக்குள் கொண்டு வந்தான். இதற்கு அவன் உருவாக்கிக் கொண்ட தொழில்நுட்பமே மொழி எனப்படுவதாகும். பொருளைக் கடந்துசெல்ல உதவுகிற மொழி என்கிற தொழில்நுட்பமே பொருளைப் பற்றிய அவனது அறிவாகவும், அதுவே பொருளின் மீதான அவனது ஆதிக்கமாகவும் அமைகிறது. ஒரு பொருளே பல்வேறு கோணம், காலம், தளங்களில் பல்வேறாக அறியப்படக் கூடிய சாத்தியத்தைக் கொண்டிருப்பதால் உண்மையில் ஒரு பொருளைப் பற்றிய அறிவு என்பது இவ்வாறு பல்வேறு நிலைகளில் அறியப்பட்டதன் தொகுப்பாகவே அமைகிறது.

**– ரவிக்குமார்**

ஒலி, சொல், வாக்கியம், வாக்கியங்களால் ஏற்படும் கருத்துருவம் மனிதனை இயக்கும், உருவாக்கும் சக்தி படைத்தது.

**– அல்துஸ்ஸர்**

கலைத்தன்மை என்பது படைப்பாளிக்கும் வாசகருக்கும் ஒரு படைப்புக்குள் ஏற்படுகிற ஒரு விசேஷமான இடையுறவு (Interrelationship) ஆகும்.

**– மிகைல் பக்தின்**

விமர்சனம் சார்ந்த அனைத்து எண்ணப் போக்குகளும் முடிவுகளும் உண்மையில் பல தளங்கள் கொண்ட ஏதேனும் அரசியல் பொருளாதார சிந்தனையோட்டத்தின் முகமூடிதான். ஆகவே, எந்தவிதமான சார்பும் அற்ற நடுநிலையான – மாசற்ற – விமர்சன நோக்கு சாத்தியமே இல்லை.

**– ரோலான் பார்த்**

# நோக்கங்கள் சிதைக்கப்படும் குடியேற்றங்கள்

அப்போது உழுந்தும் பயறும் நிலக் கடலையும் நெல்லும் எள்ளும் தாராள மாகவே விளைந்தன வன்னியில். பயிரிடப்படும் போகத்தை ஒட்டி வன்னியில் உழுந்தும் பயறும் எள்ளும் நிலக் கடலையும் எல்லா ஊர்களிலும் எல்லா வீடுகளிலும் போதிய அளவுக்குக் கிடைத்தன. அப்போது சேனைகளில் பயிரிட்டவர்களுக்கும் புலவுகளில் உழுந்தையும் பயற்றையும் பயிரிட்டவர்களுக்கும் இந்த நினைவுகள் இதைப் படிக்கும் பொழுது மீள எழும்.

முன்னர் துணுக்காய், மல்லாவி, முத்தையன்கட்டு, செட்டிகுளம், வவுனியா, நெடுங்கேணி போன்ற இடங்களில் மலிவாக உழுந்தையும் பயற்றையும் நிலக் கடலையையும் எள்ளையும் சோளத்தையும் வாங்கலாம்.

கொழும்பிலிருந்தும் நாட்டின் பிற இடங்களில் இருந்தும் இந்த இடங்களுக்கு வியாபாரிகள் வந்து இந்தப் பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டு செல்வர்.

ஆனால், பிறகு நிலைமைகள் மாறிவிட்டன. ஒன்று போரின்காரணமான மாற்றங்கள். இதனால், விளைச்சல்களைச் செய்வதில் பலவிதமான பிரச்சினைகள் உருவாகின. அதையும் கடந்து விளைச்சலை மேற்கொண்டவர்கள் இருந்தாலும் அதன் வீதம் குறைவடைந்தது.

அடுத்தது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நிலை மாற்றங்கள். இந்த மாற்றங்களால், விலைநிர்ணயம் பெரும் பிரச்சினையாகியது. உற்பத்தியையும் விட விளைச்சலின் மூலமான வருவாய் குறைவாக இருந்தது. இதனால், உற்பத்தியின் வீதமும் உற்பத்தியாளர்களின் வீதமும் குறைந்தது.

அதையும் விட முக்கியமானது, பயிர்செய்கைக்காக வழங்கப்பட்ட காணிகளைக் குடியிருப்புக் காணிகளாகவும் குடியிருப்பை அடுத்து சந்தை, கடை, தொழிற்சாலைகள் என மாற்றிவருவதே.

பயிர்ச் செய்கைக் காணிகளைக் குடியிருப்புக் காணிகளாக மாற்றிவரும இந்த நிலைமை மிகப் பயங்கரமானது. இது சட்டவிரோதமானது. காணி வழங்கற் சட்டத்தின்படி பயிர்ச்செய்கைக் காணிகளை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது. அப்படிச் சட்டவிரோதமான முறையில் அவற்றைப் பிற தேவைகளுக்காக வழங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆனால், கண்ணுக்குள் மண்ணைத் தூவி விட்டு எப்படியோ இந்தக் காணிகளை வேறு தேவைகளுக்கே மாற்றி விட்டனர் பலரும். ஏறக்குறைய முக்காற் பங்குக் காணிகள் இப்படி மாற்றப்பட்டு விட்டன. இன்னும் அப்படி மாற்றப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

இதன்மூலம் முன்னர் இந்தக் காணிகளை வழங்குவதற்காகத் திட்டமிடப்பட்ட நோக்கங்கள் முற்றாகவே சிதைக்கப்படுகின்றன. உழுந்து விளைந்த புலவில் இப்போது வீடுகளும் கடைத் தொகுதிகளும். பயறு விதைக்கப்பட்ட சேனையில் ஆலைகளும் இயந்திரம் திருத்தும் இடங்களும். எள்ளு விதைக்கப்பட்ட இடங்களில் கடைகளும் தெருக்களும் என்று முற்றாகவே அந்தப் பிராந்தியங்கள் மாறிவிட்டன.

சேனை என்றும் புலவு என்றும் சொலலப்பட்ட இடங்கள் எல்லாம் ஊர்மனைகளாகவும் சிறு பட்டினங்களாகவும் மாறிவிட்டன. காலமாற்றத்தில் இதெல்லாம் சகஜம் என்று யாரும் சொல்லக் கூடும்.

ஆனால், பிரச்சினை அதுவல்ல. உண்மையும் அதுவல்ல.

மக்களின் பொருளாதார அடிப்படைகளும் தெரிவுகளும் மாறிவிட்டதே இதற்குப் பிரதான காரணம். அடுத்தது, கடந்த முப்பது ஆண்டுகளாக காணியற்றோருக்கான காணிப்பங்கீடுகள் வழங்கப்படாத காரணத்தினால், இருக்கின்ற காணிகளைப் பங்கீடு செய்ய வேண்டிய அவசியத்திற்கு ஒவ்வொருவரும் தள்ளப்பட்டனர். குடியிருப்புக்கான காணிகளைப் பெற முடியாத நிலையில் தம்மிடம் இருக்கின்ற காணிகளைக் குடியிருப்புகளாக மாற்ற வேண்டிய அவசியத்திற்குத் தள்ளப்பட்டனர் மக்கள்.

இதனால், விளைநிலங்கள் தொழில் மையங்களாகவும் வணிக வளாகங்களாகவும் குடியிருப்புகளாகவும் மாறி வருகின்றன.

இதன்மூலம் 'வன்னிப் பகுதியானது ஒரு பெரும் விவசாயப் பிரதேசம்' என்றிருந்த அடையாளம் குலைந்து, சனங்களின் குடியிருப்புப் பிரதேசங்களாக மாறிவருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இது இந்தப் பகுதியிலுள்ள மக்களின் தொழில் மற்றும் பொருளாதார அடிப்படைகளிலும் பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. இதைவிட, இந்தப் பிரதேசங்களின் தனித்துவ அடையாளங்களும் மாறிவிட்டன.



'முன்னர் ஒரு காலம் வவுனியாவில் உழுந்து விதைப்பார்கள்" என்று சொலலும்போது அதை நம்புவதற்கு இப்பொழுது கடினமாக இருக்கிறது என்றால், இந்த அடையாளச் சிதைவு எந்தளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

எனவே, இதைப்போல பல்வேறு பிரச்சினைகள், இன்று காணிப்பகிர்வின்மை தொடர்பாகவும் காணியற்ற நிலையினாலும் மாறியுள்ள பொருளாதாரப் போக்கினாலும் மக்களின் தெரிவுகளில் ஏற்ப்பட்டுள்ள மாற்றங்களினாலும் ஏற்பட்டுள்ளன.

இதன் விளைவாக இப்போது அரிசி தொடக்கம், உழுந்து, பயறு, நிலக் கடலை, எள்ளு என எல்லாமே வேறு இடங்களில் இருந்து - வெளியே இருந்து வரவேண்டியுள்ளது.

பங்களாதேஷில் இருந்து உழுந்து வருகிறது. இந்தியாவில் இருந்து நிலக் கடலையும் பருப்பும் பயறும் வருகிறது. போதாக்குறைக்கு பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்கிறார்கள். சீனாவில் இருந்தும் பர்மாவில் இருந்தும் அரிசி வருகிறது. ஜப்பானில் இருந்து வாகனங்களும் இலத்திரனியல் பொருட்களும் மட்டும் வரவில்லை, இலங்கைக்கு உணவுப் பொருட்களும் அங்கிருந்து எடுத்து வரப்படுகின்றன.

அதாவது, நாட்டிற்குத் தேவையான உற்பத்தியையும் வீட்டுக்குத் தேவையான பொருட்களையும் உற்பத்தி செய்யும் காலம் போய், எல்லாற்றுக்கும் வெளியே இருந்து எதிர்பார்க்கும் நிலை இது.

உள்நாட்டு மக்களுக்கான அரசியற் தீர்வை வெளியே இருந்து எதிர்பார்ப பனை போல, இன்று தமிழர்கள் தங்களின் பொருளாதாரத்தை வெளியே இருந்து எதிர்பார்ப்பதைப்போல, தங்களுக்கான உற்பத்திகளையும் வெளியே இருந்து எதிர்பார்க்கும் காலம் வந்துளளது.

அதாவது, இது ஓர் வேரிழப்பு நிலையே! இந்த வேரிழப்பு நிச்சயமாக எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். வேரற்ற சமூகம் அடிப்படைகளற்ற நிலைக்குத் தள்ளப்படும். அடிப்படைகளில் தளர்வுகள் ஏற்படுவது ஆபத்தானது.

இனப்பிரச்சினைக்கு நிகரானவை காணிப்பிரச்சினைகளும் குடியேற்றப் பிரச்சினைகளும். அவற்றில் இதுவும் ஒன்று.

**- அரவிந்தன் கட்டுரையிலிருந்து**

# விவசாய நிலங்கள்; சீன நிலைமை

உலக மக்கள் தொகையில் 21 சதவிகிதத்தை சீனா கொண்டிருக்கிறது. உலகமெங்கும் உள்ள மொத்த விளைநிலங்களில் (Cultivable lands) 7 சதவிகிதம்தான் சீனாவில் உள்ளது. இதை வைத்துக் கொண்டு உணவுப் பொருட்களை மக்களுக்குத் தட்டுப்பாடின்றி வழங்குவது சாதாரண காரியம் அல்ல.

சீனாவின் மொத்த நிலப் பரப்பில் விளைநிலப் பரப்பளவு குறைவாக இருப்பதற்கு, அங்கு மலைகள், குன்றுகள், காடுகள் அதிகமாக இருப்பதுதான் காரணமாகும்.

சீனாவில் விவசாயப் பயன்பாட்டுக்கான நிலத்தின் அளவு ஏற்கெனவே குறைவாக உள்ள சூழ்நிலையில், ஆண்டுதோறும் விளை நிலப் பரப்பளவு மேலும் குறைந்து கொண்டே வருகிறது. இதற்குக் காரணம் - மண் அரிப்பு, தொழிற்சாலைகளின் பெருக்கம் மற்றும் நகர்ப்புறங்களில் வீட்டு மனைகளை உருவாக்க விளைநிலங்களைக் கையகப்படுத்துவது ஆகியனதான். இதன் காரணமாக வருடத்துக்கு சுமார் 4 இலட்சம் ஏக்கர் அளவுக்கு விளைநிலப பரப்பளவு குறைந்து வருகிறது. சீன அரசு இதுகுறித்து பெரிதும் கவலைப் படுகிறது.

சீனாவில் உள்ள வேளாண் விஞ்ஞானிகள், 2020 ஆம் ஆண்டுக்குள், இப்போதுள்ள விளைநிலப் பரப்பில், 1 கோடி ஏக்கர் விளைநிலத்தை சீனா இழந்துவிடும் என்று எச்சரித்துள்ளனர். அதனால் சீன அரசு, 12 கோடி ஏக்கரை விளைநிலமாகப் பாதுகாக்க வேண்டும் என்று உறுதி பூண்டுள்ளது.

விளைநிலத்தின் அளவு குறைவாக இருந்தாலும், சீனாவில் உற்பத்தித் திறன அதிகம். அதற்குக் காரணம் - மண்ணின் தன்மை, பாசன முறை மற்றும் அதிக விளைச்சல் தரும் ரகங்களைப் பயிரிடுவது ஆகியவைதான்.

உலக நாடுகளில் தானிய வகைகளையும், இறைச்சியையும் அதிகம் உட்கொள்வது சீனர்கள்தான். அதே போல உரங்களைப் பயன்படுத்துவதிலும் சீனா முதலிடத்தில் உள்ளது.

விவசாய மேம்பாட்டுக்காக பல நடவடிக்கைகளை சீன அரசு மேற்கொண்டு வந்த போதிலும் மக்கா சோளம், சோயா பீன்ஸ், இறைச்சி உள்ளிட்ட பல உணவுப் பொருட்களை சீனா இறக்குமதி செய்து வருகிறது.



விவசாயிகளின் வருமானம் அங்கு குறைவாக உள்ள போதிலும், எல்லா விவசாயிகளுக்கும் அங்கு கல் கட்டட வீடு சொந்தமாக உள்ளது. அதற்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது. எல்லோரது வீடுகளிலும் டெலிவிஷன் இருக்கிறது. அங்கும் நகர்ப்புறங்களில் வசிப்பவர்களோடு ஒப்பிடும்போது கிராமபபுற விவசாயிகளின் வருமானம் குறைவாக இருப்பதால், கிராமப்புற இளைஞர்கள் அங்கு விவசாயத்தில் ஈடுபட விரும்புவதில்லை. நகரங்களுக்குச் சென்று தொழிற்சாலைகளில் வேலை பார்க்க விரும்புகிறார்கள். ஆனால் அங்கு, நகர்ப்புறத்தில் குடியேற, குடியுரிமை அனுமதி பெறுவது அவசியம். அந்த அனுமதி சுலபமாகக் கிடைப்பதில்லை. இதற்காக வருடக் கணக்கில் கூட காத்திருக்க வேண்டியிருக்கும்.

விவசாயத் துறையில் ஈடுபாடு குறைவதால், அங்கு 10 ஆண்டுகளுக்கு முன 70கோடியாக இருந்த விவசாயிகளின எண்ணிக்கை தற்போது 42 கோடியாகக் குறைந்துள்ளது. சீனா, உணவுப் பொருளை அதிகமாக இறக்குமதி செய்ய இதுவும் ஒரு காரணம்.

சிறிது காலத்துக்கு முன்பு வரை, சீன விவசாயிகள் இரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்தி வந்தனர். அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பழங்கள் அமெரிக்காவுக்குக் கூட ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், இரசாயன உரங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கு அமெரிக்கா தடை விதித்தது. அதனால் இயற்கை உரங்களைப் பயன்படுத்த சீனா முன் வந்துள்ளது. அங்கு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய இயற்கை உரங்களுக்கு அரசு தாராளமாக மானியம் தருகிறது.

சீனாவில் உள்ள ஓரளவு வசதியான விவசாயிகள் அருகில் உள்ள ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு நிலங்களைக குத்தகைக்கு எடுத்து, விளைச்சல் செய்து, சீனாவுக்கு அதைக் கொண்டு செல்கிறார்கள்.

சீனாவில் உள்ள கிராமப்புற மக்கள் விவசாயத்தைக் கைவிட்டு நகர்ப்புறம் நோக்கிச் செல்வதால், நகரமயப் பிரச்சினை - அதாவது நகர்ப்புறத்தில் குடியிருப்பு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே சீன அரசு கிராமப்புற முன்னேற்றத்தை உத்தேசித்தும், விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும் 2009ஆம் ஆண்டின் மொத்த பட்ஜெட்டில் 20 சதவிகிதத்தை கிராமப்புற வளர்ச்சிக்கென ஒதுக்கியது.

இப்போது சீனாவில் தயாராகும் வேளாண் பொருட்கள் உற்பத்தி அளவை, இன்னும் 20 வருடங்களில் 2 மடங்காக உயர்த்தினால் தன்னிறைவு காண முடியும் என்று சீன அரசு கருதுகிறது. தற்போதுள்ள நிலையே நீடித்தால், இன்னும் 20 ஆண்டுகள் கழித்து 40 கோடி டன் உணவுப் பொருட்களை சீனா இறக்குமதி செய்ய வேண்டி வரும் என்று சீன விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இதனால் எதிர்கால தேவையைக் கருதி, இப்போதே சீன அரசு திட்டங்களை வகுத்து வருகிறது.

***- ஜி. விஸ்வநாதன்***

# மீன்பிடிக்க மீண்டும் கட்டுப்பாடுகள் சுழிபுரம் கடற்றொழிலாளர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கடற்பரப்பில் கடந்த சில நாட்களாக மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள படையினர் மீண்டும் கட்டுப்பாடுகளை விதித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக சிறகு வலைத் தொழிலில் (களங்கட்டி) ஈடுபட்டுவரும் மீனவர்களே இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுழிபுரம் கடற்கரையோரத்தை மீனவர்கள் பயன்படுத்தவும் படையினர் தடை விதித்திருப்பதாகவும் தமது காவலரண் உள்ள கடற்பகுதியினூடாகவே வந்து சுழிபுரம் கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் படையினரால் மீனவர்கள் வலுக்கட்டாயமாக பணிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவ்விடயம் குறித்து சுழிபுரம் கெங்காதேவி கடற்றொழில் கூட்டுறவு சங்கத் தலைவர் தெய்வேந்திரம் பொன்னாலைப் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் பொறுப்பதிகாரிக்கு கடிதமொன்றை கையளித்ததுடன், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரனிடமும் முறையிட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் படையினர் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் இதன் காரணமாக சுழிபுரம் பகுதி மக்களின் கரையோர மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# யாழ். மேல் நீதிமன்றுக்கு ஆணையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மேல்நீதிமன்ற ஆணையாளராக இதுவரை கடமையாற்றிய ஜே.விஸ்வநாதன் யாழ். மேல்நீதிமன்ற ஆணையாளராக நேற்றுமுதல் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டிருப்பதாக யாழ். மேல்நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் யாழ். மேல் நீதிமன்றப் பதிவாளராகக் கடமையாற்றிய எஸ்.பரமராசா யாழ். சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் முதல் புதிய யாழ். மேல்நீதிமன்ற ஆணையாளரின் கீழ் தமது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் யாழ். மேல்நீதிமன்ற பதிவாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (பா)

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் மூடப்பட்டிருந்த நகைக் கடைக்கு முன்பாக குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் யாழ். பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பெருமாள் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை நந்தகோபால் (வயது - 51) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்ட இவர் இரவு வீட்டிற்கு வரவில்லை.

இதனையடுத்து உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றவேளை குறித்த கடையில் அளவுக்கதிகமான மதுபோதையில் இருந்துள்ளார்.

இவர் நகை வியாபார நிலையங்களில் பவுண் அரிக்கும் தொழில் செய்பவர் என்றும் 4 பிள்ளைகளின் தந்தை என உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். குற்றப்பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (எஸ்)

## வந்தார் கிருஷ்ணா...

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா ஆகியோர் வரவேற்றனர்.

இதன்பின்னர் அலரிமாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வில் அவர் கலந்துகொண்டார். அத்துடன் ஜனாதிபதி, வெளியுறவு அமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பலருடனும் இன்றைய தினம் அவர் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

நேற்றிரவு கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர் கலந்துரையாடியுள்ளார்.

நாளைய தினம் வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொள்ளும் அவர் முற்பகல் 10.45 மணிக்கு கிளிநொச்சி மருத்துவ மனைக்குச் சென்று மருத்துவ உபகரணங்களைக் கையளிப்பார். பின்னர் 11.15 மணிக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் புனரமைப்புச் செய்யப்பட்ட சிவபாத கலையக பாடசாலையை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொள்வார். பின்னர் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்யும் அவர் பிற்பகல் 3.00 மணிக்கு அரியாலையில் இந்திய நிதியுதவியுடனான வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஒருதொகுதி வீடுகளை பயனாளிகளிடம் கையளிப்பார்.

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்னால் பி.ப. 3.45 மணியளவில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்வதுடன் காங்கேசன் துறைமுகத்தின் புனரமைப்பு தொடர்பான அறிவிப்பையும் வெளியிடுவார்.

இந்நிகழ்வுகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## படையினர் வசமிருந்த....

குடியிருப்புக்களைப் பெற்றுக்கொண்டனர்.

மீளவும் தமது சொந்த வீடுகள் தமக்கு கிடைத்தமையையிட்டு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமது நன்றியை மக்கள் தெரிவித்ததுடன், இப்பகுதியில் நிலவும் அடிப்படை வசதிக் குறைபாடுகளான மலசலகூட வசதியின்மை, மின்சாரமின்மை, சீரற்ற போக்குவரத்து, பாதைகள் புனரமைப்பு, பாடசாலை, வைத்தியசாலை புனர்நிர்மாணம் சுத்தமான நீரின்மை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிப்படை வசதிகள் அனைத்தும் கட்டம் கட்டமாக நிறைவேற்றித்தரப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும் இப்பகுதியில் திருட்டுக்கள் இடம்பெறுவது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, உடனடியாக அப்பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தற்காலிகமாக பொலிஸ் நிலையத்தை அமைக்குமாறு அமைச்சர் உத்தரவிட்டார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வேலணை பிரதேச சபை தவிசாளர் சிவராசா, வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வடபிராந்திய பிரதி கடற்படைத் தளபதி டி.எச்.டி. சில்வா, தீவக கடற்படை கட்டளை அதிகாரி திஸாநாயக்க, மண்டைதீவு கடற்படை கட்டளை கொமாண்டர் ஹெட்டியாராச்சி உட்பட கிராம அலுவலர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (23,எப்.எஸ்)

## ஜே.வி.பி....

கடத்தப்பட்டனர் என்பது குறிப்படத்தக்கது.

இதேவேளை, நாம் இலங்கையில் அமைப்பு சார்பிலும் தென் பகுதியிலிருந்து யாழ். செல்லும் நூற்றுக்கணக்கானவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கவுள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் உதுல் பிரேமரட்ண தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், இதன் போது மக்களுக்கு துண்டுப்பிரசுங்கள் விநியோகிக்கும் நிகழ்வும் இடம்பெறும் எனவும், ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்களையும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இலங்கையின் தேசிய....

கூடிய முயற்சிகளை மேற்கொண்டு இறுதியான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவதே இந்தியாவின் அணுகுமுறையாக உள்ளது.

தமிழ் மக்களின் உணர்வுகளையும், அபிலாஷைகளையும் இந்தியா கவனத்தில் கொண்டுள்ளதுடன், அவற்றுக்கு எமது வெளிவிவகாரக் கொள்கைகளிலும் முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

இலங்கையில் தீர்வு காணப்படாமல் உள்ள அனைத்துப் பிரச்சினைகளும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படுவதுடன், இருதரப்பினரும் திருப்தியடையக் கூடிய வகையில் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காண்பது இந்திய, இலங்கைத் தமிழ் மக்களுக்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என நான் கருதுகிறேன்.

இந்திய, இலங்கைத் தமிழ் மக்களுக்கு இடையிலான வர்த்தக மற்றும் போக்குவரத்துச் செயற்பாடுகள் மேலும் முன்னேற்றமடைந்தால், அது வெற்றிக்கான சூழலாக இருக்கும்.

இலங்கையுடனான இந்தியாவின் அரசியல் உறவு என்பது பொருளாதார சூழலில் தங்கியுள்ளதால், அந்நாட்டுடனான பொருளாதாரத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவ்டிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளப் போகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## படைத்தரப்பின் சிவில்....

காரணம் என்றும் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்திய வீட்டுத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக தம்க்கு இரண்டு மாவட்ட அரச அதிபர்களும் அறிக்கை சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே நடவடிக்கையெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் படைத்தரப்பினர் பாதுகாப்பு காரணங்களுக்காகவே இதுவரை விடுவிககப்படாத பொதுமக்களினதும் ஏனைய பொது இடங்களிலும் உள்ளனர். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் படைத்தரப்பினரிடமிருந்து மீட்டு காணி உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று மேலுமுள்ள பகுதிகளும் விடுவிக்கப்படுள்ளன. இவ்வாறே கிளிநொச்சி மாவட்டத்திலும் படையினர் வசமுள்ள மக்களின் காணிகள் மற்றும் வீடுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரசின் கொள்கைக்கமைய மீள்குடியேற்றம் அபிவிருத்தி மற்றும் காணியில்லாதவர்களுக்கு காணிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் யாவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பிரகாரமே இறுதி முடிவெடுக்கப்படும்.

அத்துடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சிவில் நிர்வாகத்தில் படைத் தரப்பினரின் தலையீடுகள் இருக்கும் பட்சத்தில் அவற்றையும் படிப்படியாக நீக்குவது தொடர்பிலும் தாம் கவனம் செலுத்தவுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், பாதுகாப்பு காரணங்களுக்காக சில சட்டங்கள் இருக்கின்றபோது அவற்றை உடனடியாக நீக்குவதென்பது சாத்தியமற்றது எனவும் தெரிவித்தார்.

இதனிடையே கிளிநொச்சியிலிருந்து இரணைமடு தண்ணீரை யாழ். மாவட்டத்திற்கு கொண்டுவருவது தொடர்பில் தற் போது முன்னெடுக்கப்பட்டுவரும் நடைமுறைக்கேற்ப நீர்த்தாங்கிகள் அமையப்பெறவுள்ள இடங்கள் இதனால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் குறித்தும், கோப்பாய் பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினது ஒலிபரப்பு கோபுரத்தை அமைப்பதிலுள்ள சாதக பாதக நிலை தொடர்பாகவும் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இரு மாவட்டங்களின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின்போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுககளின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், யாழ்., கிளிநொச்சி அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## அபிவிருத்திக்....

வலியுறுத்திய போது அதனை செவிமடுக்காத நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நிதானம் இழந்த நிலையில் தனது கருத்தினை கூறிமுடித்தார். இதன் போது கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள் பிரதேச செயலர்கள் திணைக்கள உயரதிகாரிகள் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் சகோதரனால் நடத்தப்படுகின்ற தமிழ்வின், லங்காசிறி இணையத் தளங்களில் உண்மைக்குப் புறம்பாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது. தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என உண்மைக்குப் புறம்பாக செய்திகளை வெளியிட்டுள்ளன.

## அரசியல் தீர்வை....

உறுப்பினர்களான இரா.ச்ம்பந்தன், மாவை சேனாதிராஜா, பொன். செல்வராசா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்குபற்றினர்.

இதன்போது, வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவமயமாக்கம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவிடம் தெரியப்படுத்தியதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை தொடர்பிலும் இந்திய அமைச்சர் கிருஷ்ணாவிடம் எடுத்துக் கூறியதாக அவர் கூறினார்.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் சம்பூர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அனல் மின் நிலையத்தினால் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் எஸ்.எம். கிருஷ்ணாவிற்கு தெளிவுபடுத்தியதாக சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட விடயங்களை அரச தரப்பினருடன் இடம்பெறவுள்ள சந்திப்பின் போது வலியுறுவதாக எஸ்.எம்.கிருஷ்ணா உறுதியளித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, 13 ஆவது திருத்த சட்டத்திற்கு அப்பால் அதிகாரப் பரவலாக்கம் செய்வதாக இந்தியாவிடம் இலங்கை அரசு உறுதியளித்திருந்தது. ஆனால், தற்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தை கூட முறையாக அமுல்படுத்த தயங்குகின்றனர் என எஸ்.எம். கிருஷ்ணாவிடம் தெரிவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

# திணிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த அனுமதியோம்

## போர்க்கொடி தூக்குகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவினால் எம்மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒன்றாகும். இதற்கு மக்களுடைய ஆதரவும் இல்லை எனத் தெரிவித்திருக்கும் ஜாதிக ஹெல உறுமய, இந்தியாவின் தேவைகளுக்காக இதனை நடைமுறைப்படுத்தவோ, காணி பொலிஸ் அதிகாரங்களைக் கொடுக்கவோ முடியாது எனவும் உறுதியாகத் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருட்டுத்தனமாகப் பேசுவதால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமல் எதனையும் நடைமுறைப்படுத்த முடியாது. எனவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாகவே பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும் எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதயன் கம்பன்பில தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

1956 ஆம் ஆண்டு முதல் தமிழ்த் தலைவர்கள் அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதுடன், பல்வேறு உடன்படிக்கைகளையும் செய்து கொண்டார்கள். இருந்தபோதிலும் எதுவுமே பலனளிக்கவில்லை. சிங்கள எதிர்ப்பு காரணமாகவே அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. அதனால் அரசாங்கத்துடன் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மட்டும் திருட்டுத்தனமாகப் பேச்சுக்களை நடத்துவதால் பலன் கிடைக்கப்போவதில்லை

இதனால் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலமாகப் பேச்சுக்களை முன்னெடுக்கவேண்டும். இவ்வாறான பேச்சுக்களின்போது தனி ஈழம் தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருத்துக்களை வெளியிடலாம். இவ்வாறு பேச்சுக்களை நடத்துவதே பலனளிப்பதாக அமையும் என்பதுடன், அதன் மூலமாகவே தீர்வைக் காணவும் முடியும். சிங்கள எதிர்ப்பை மீறி எதனையும் செய்ய முடியாது.

13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அது இந்தியாவினால் எம்மீது திணிக்கப்பட்ட ஒன்றாகும். அதற்கு மக்களுடைய ஆதரவு கிடையாது. எனவே அதனை நடைமுறைப்படுத்தக் கூடாது. இத்திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் விரிவான முறையில் ஆராயப்பட வேண்டும். அத்தோடு மக்களின் ஆதரவும் பெறப்பட வேண்டும். இந்தியாவின் தேவைகளுக்காக மட்டும் இதனை நடைமுறைப்படுத்த முடியாது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படக் கூடாது. இவ்வாறு கொடுக்க முற்பட்டால் அதனை நாம் கடுமையாக எதிர்ப்போம். இந்தவிடயங்களில் இந்தியாவின் அழுத்தங்களைக் கவனத்தில் கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவிததுள்ளார்.

# பௌஸியின் மகனை கைதுசெய்ய உத்தரவு

(கொழும்பு)

சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான ஏ.எச்.எம். பௌஸியின் மகனான மேல் மாகாண சபை உறுப்பினர் நவ்சர் பௌஸியை உடனடியாகக் கைது செய்யுமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடந்த 13 ஆம் திகதி கொழும்பு, டொரிங்டன் பகுதியில் நபர் ஒருவரை நவ்பர் பௌஸி அச்சுறுத்தியமை தொடர்பிலேயே அவரைக் கைது செய்யுமாறு குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கு கொழும்பு பிரதம நீதிவான் ரஸ்மி சிங்கப் புலி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

# ரிஸானாவின் முகவர்களுக்கு இருவருட கடூழிய சிறை

(கொழும்பு)

தவறான தகவல்களை சமர்ப்பித்து ரிஸானா நபீக் என்ற பெண்ணை சவூதி அராபியாவுக்குக் அனுப்பினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இரு முகவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தலா இரு வருடக் கடூழியச் சிறைத தண்டனையை விதித்ததுடன் 60,000 ரூபா அபராதமும் செலுத்தவேண்டும் என உத்தரவிட்டது.

பாக்கீர் மொஹிடீன் வஜுர்டீன், சாஹல் ஹமீட் மொஹமது அப்துல் லத்தீப் ஆகியோருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. இதேவேளை குற்றச் சாட்டுக்குள்ளான மூன்றாவது சந்தேக நபரான ஹம்ஸா லெப்வை அப்துல் ஸலாம் என்பவருக்கு எதிரான விசாரணை எதிர்வரும் 24 ஆம திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி அரசியல் தீர்வைக் காண வேண்டும்

## கூறுகிறார் அமைச்சர் வாசுதேவ

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதற்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன், மற்றவர்களின் கருத்துக்கு செவிமடுத்து இந்தியாவுடனோ அல்லது இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவுடனோ முரண்படுவது அர்த்தமற்ற செயல் எனவும அவர் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினையை தனி பௌத்த கொள்கைகள் தீர்த்து வைக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்ட அவர், ஜாதிக ஹெல உறுமய போன்றவர்களின் அரசியல் தீர்வுக்கான எதிர்ப்புகளானது வெறும அரசியல் நோக்கங்களையே கொண்டது என்றும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளதாவது,

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகவே 13 ஆவது திருத்தச் சட்டம் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டது. இதனை இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்கள் ஒப்பந்த ரீதியாக ஏற்றுக் கொண்டுள்ளன.

கடந்த காலங்களில் போர் இடம்பெற்ற காரணத்தினால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது கடினமாக இருந்தது.

ஆனால் தற்போது அவ்வாறானதொரு சூழ்நிலை இன்றி நாட்டில் சுமுகமான சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்த ஏற்ற காலமாகத் தற்போதைய கால கட்டத்தை கூறலாம். இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காக 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா வலியுறுத்துகின்றது.

இதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இலங்கையின் அரசியலமைப்பில் காணப்படுவதை நடைமுறைப்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜாதிக ஹெல உறுமய போன்ற சிறு பிரிவினரே எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இந்த எதிர்ப்புகளும் எவ்வித அடிப்படைத் தன்மையும் அற்றவை. இலங்கைக்கு தனி பௌத்த கொள்கைகள் ஒவ்வாது. மாறாக பல்லின சமூகங்களுக்கு ஏற்ற கொள்கைகள் அத்தியாவசியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் செயற்பாடுகள் குறித்து அவதானமாக இருக்கப் பணிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் குறித்து மிகவும் அவதானமாக இருக்குமாறு ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கை தூதுவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சின் ஊடாக குறித்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சின்னங்களைக் கொண்டு முத்திரைகள் வெளியிட அண்மையில் சில நாடுகள் நடவடிக்கை எடுத்திருந்தன. அதன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு வழங்கும் பிரிவினரின் செயற்பாடுகள் புலப்படுவதாக வெளிவிவகார அமைச்சு தூதுவர்களுக்கு அறிவித்துள்ளது.

பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் விடுதலைப் புலி முத்திரைகள் வெளியிடப்பட்டதோடு அதற்கு வெளிவிவகார அமைச்சு கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெறுபேறு குளறுபடிக்கான நடவடிக்கை ஜனாதிபதி இறுதி முடிவெடுக்க வேண்டும்

## விசாரணைக் குழு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறு குளறுபடிகள் தொடர்பாக விசாரணை நடத்திய ஐவர் கொண்ட குழு, சில குளறுபடிகளுக்கு பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகள் பொறுப்பெனக் கூறியுள்ளபோதும் இது தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்வது ஜனாதிபதியைப் பொறுத்ததாகும் என அக்குழுவின் செயலாளர் தாரா விஜேதிலக்க தெரிவித்தார்.

இக்குழுவை ஜனாதிபதி நியமித்த நிலையில், அவரிடம் அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. அடுத்த நடவடிக்கை மேற்கொள்வது ஜனாதிபதியைப் பொறுத்ததாகும். இக்குழு கண்டறிந்தவை மற்றும் சிபாரிசுகள் தொடர்பாக கருத்து கூறுவதற்கு நாம் தயாரில்லை. இது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்வது முற்றிலும் ஜனாதிபதி செயலகத்திற்குரியதாகவும், என அவர் கூறினார். அடிப்படை சர்ச்சைக்குரிய இஸட் புள்ளி தொடர்பாக குறித்து விசாரிப்பதற்கான ஆணைகுழுவுக்கு வழங்கப்படவில்லை அதனால் இஸட் புள்ளி முறைமையை கண்டுபிடித்ததாக கூறப்படும் பேராசிரியர் ஆர்.ஓ. தட்டிலை அழைக்கவில்லை எனவும் தாரா விஜே திலக்க கூறினார்.

# ஜே.வி.பி.யில் ஏற்பட்டுள்ள பிளவு ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல்

## எச்சரிக்கிறார் அமைச்சர் மைத்திரிபால

ஜே.வி.பியில் அண்மையில் ஏற்பட்ட பிளவு நாட்டின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட பாரிய அச்சுறுத்தல் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெிவித்துள்ளார். பொலன்னறுவையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பியில் இருந்து தற்போது விலகிச் சென்றுள்ளவர்கள், ஆயுத போராட்டம் தொடர்பில் நம்பிக்கை கொண்டவர்கள் என்ற தகவல்கள் கிடைத்துள்ளன. நாட்டின் அபிவிருத்திக்காக அரசாங்கம் பாரிய அர்ப்பணிப்புகளை மேற்கொண்டு, வரும் சூழ்நிலையில், சிலர், பல்கலைக்கழகங்களிலும், அரச நிறுவனங்களிலும் போராட்டங்களை நடத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழங்களில் பிளவுகளை ஏற்படுத்தி, பதட்டமான சூழலை ஏற்படுத்த சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் ஈடுபட்டுள்ளனர். இப்படியான அரசியல் சூழ்ச்சியில், மாணவர்கள் உட்பட எவரும் சிக்க இடமளிக்க முடியாது எனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் கூறியுள்ளார்.

# இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

பருப்பு, சீனி, வெள்ளைப்பூண்டு, தேங்காய் எண்ணெய் ஆகியவற்றுக்கான இறக்குமதி வரிகளை அரசாங்கம் அதிகரித்துள்ளது. இதன்படி, ஒரு கிலோகிராம் பருப்புக்கான இறக்குமதி வரி 8 ரூபாவினாலும் ஒரு கிலோ சீனிக்கான இறக்குமதி வரி 5 ரூபாவினாலும் ஒரு கிலோ வெள்ளைப் பூண்டுக்கான இறக்குமதிவரி 15 ரூபாவினாலும் ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய்க்கான இறக்குமதி வரி 75 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# புலிகளுடன் தொடர்புடையவர் கேரளாவில் கைதானார்

(கொழும்பு)

தைப்பொங்கல் தினத்தன்று காய்ச்சலுக்கென சிகிச்சை பெறச் சென்ற நோயாளிகள் வைத்தியசாலை நிர்வாகத்தினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு கோபபாய் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

திடீரென சுகவீனமுற்று அவதியுற்ற நோயாளிகள் கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கென சென்ற வேளை அங்கிருந்த நபர்களால் ஈவிரக்கமின்றித் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதனால் விசனமடைந்த நோயாளிகளின் உறவினர்கள் கோப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் வலி. மேற்கு பிரதேச எதிர்க்கட்சித் தலைவருமான இராமநாதன் ஐங்கரனின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை அடுத்து உடனடியாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பினை ஏற்படுத்தி மீண்டும் நோயாளிகளைப் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.